# நச்சினார்க்கினியர்

மு. அண்ணாமலை எம்.ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

பழனி பிரசுரம்
புதுக்கோட்டை :: திருச்சி :: சென்னை-5.

முதற்பதிப்பு : ஜூன், 1956

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 105784

விலை ரூ. 1—8—0.

இந்நூலாசிரியரின்

இனிய கவிதைத் தொகுதி; பல அறிஞர்களின் போற்றுதல் பெற்ற சிறந்த நூல்:

**தாமரைக்குமரி**

விலை ரூ. 1—8—0

அச்சிட்டோர் :
செந்தமிழ்ப் பதிப்பகம்,
புதுக்கோட்டை.

# உள்ளே ★ ★ ★

பக்கம்

1. நச்சினார்க்கினியர் யார்? ... 5
2. இந்நூலின் நோக்கம் ... 10
3. நிறைநோக்கும் குறைநோக்கும் ... 13
4. நச்சினார்க்கினியர் கண்ட காமமும் துறவும் 64
5. நச்சினார்க்கினியரும் அனங்கமாலையும் ... 77
6. பாயிரச் செய்யுட்கள் ... 100

# நச்சினார்க்கினியர் யார்?

## 1. உரையாசிரியர்.

நச்சினார்க்கினியர் பழைய உரையாசிரியர்களில் ஒருவர். பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி முதலிய வற்றிற்கு உரை வகுத்துள்ளார். குறுந்தொகை இருபது பாடல்களுக்குப் பேராசிரியர் உரை வகுக்காமற் போகவே எஞ்சிநின்ற அவைகட்கு நச்சினார்க்கினியர் உரை எழுதினார் என்று கூறப்படுகிறது. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்டவர். தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் முன் ஐந்தியல், செய்யுளியல் முதலியன வற்றிற்குரிய உரை இப்பொழுது அச்சிலே கிடைக்கின்றன. இலக்கணம் இலக்கியம் ஆகிய இரு துறையினும் வல்லவராயினும் அவரை ஓர் இலக்கிய உரைகாரராக வைத்துக் காண்பதே பொருந்தும்.

கலித்தொகை, பத்துப்பாட்டு முதலிய நூற்களுக்குச் சொல்லுக்குச் சொல் பொருள் கூறியும் ஆங்காங்கே விளக்கம் காட்டியும் செல்கிறார். சீவக சிந்தாமணியிலே சில பாடல்களுக்கு உரையே எழுதாமலும், சில பாடல்களுக்கு வினைமுடிபு மட்டும் காட்டியும், சில பாடல்களில் சில சொற்களுக்கு மட்டும் விளக்கம் செய்தும், சில பாடல்களில் ஒரு சொல்லையும் விடாமல் விரிவுரை செய்தும் செல்கிறார். ஒரு விரிவான காவியத்திற்குச் சுருக்கமாகவும், அழகாகவும், திட்பமாகவும், உரை செய்வதெப்படி என்பதற்குச் சீவக சிந்தாமணி உரை முன்மாதிரியாக அமைந்திருக்கிறது.

## 2. ஊர், சாதி, சமயம்.

நச்சினார்க்கினியர் மதுரையில் பிறந்து வாழ்ந்தவர். பாரத்துவாச கோத்திரத்தைச் சேர்ந்த ஸ்மார்த்த பிராமணராவர். தொல்காப்பியத்தின் ஒவ்வோர் இயல் முடிவிலும் **"மதுரை ஆசிரியர் பாரத்துவாஜி நச்சினார்க்கினியர்**

**செய்த காண்டிகை உரை முற்றிற்று**" எனக் காணப்படுகிறது. பத்துப்பாட்டு உரை முடிவிலும், உரைச் சிறப்புப்பாயிரங்களிலும் அவ்வாறே கூறப்படுகிறது. எனவே மேற்கண்ட முடிவை நாம் ஏற்றுக் கொள்ளலாம். வைணவர், ஸ்மார்த்தர், மாத்துவர் ஆகிய மூவரிடத்தும் பாரத்துவாச கோத்திரம் காணப்படுகிறது.

"**வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது**"

[**தொல் — கற்பு—47** ]

என்ற நூற்பாவிற்குக் கல்வி குறித்துப் பிரியும் பிரிவின் கால அளவு மூன்று யாண்டுக்கு மேல் மிகாது என்பது பொருளாகும். இக்கருத்தினையே இளம்பூரணரும் உரைத்தனர். நம்பி அகப்பொருள்காரரும் "ஓதற் பிரிவு ஒரு மூன்றியாண்டே" என்று கூறினர். நச்சினர்க்கினியர் கல்விக்காகப் பிரியும் பிரிவிற்குக் கால எல்லை கூற உடன்படாராய் வேறு பொருள் உரைத்தனர். இறவாது என்ற சொல்லை இரண்டிடத்தும் கூட்டி கல்வி வேண்டிய யாண்டு இறவாது என்றும், மூன்று இறவாது என்றும் கொண்டார்.

"இஃது 'ஓதலும் தூதும்' என்னும் சூத்திரத்திற் கூறிய ஓதற்பிரிவிற்குக் காலவரையறை இன்றென்பதும் அவ்வோத்து இதுவென்பதும் உணர்த்துகின்றது" என்று நுதலிய பொருள் கூறி,

> "**துறவறத்தினைக் கூறும் வேதாந்தம் முதலிய கல்வி வேண்டிய யாண்டைக் கடவாது; அக் கல்வியெல்லாம் மூன்று பதத்தைக் கடவாது**"
> **மூன்று பதமாவன அதுவென்றும் நீ என்றும் ஆனு என்றும் கூறும் பதங்களாம். அவை பரமுஞ் சீவனும் அவ்விரண்டும் ஒன்றுதலும். ஆதலின் இம்மூன்று பதத்தின் கண்ணே தத்துவங்களைக் கடந்த பொருளை உணர்த்தும் ஆகமங்களெல்லாம் விரியுமாறு உணர்ந்து கொள்க**"

[**தொல்— கற்பு— 47—உரை.**]

என்று அவர் எழுதிச் சென்றார்.

அவருடைய உரை 'தத்துவமஸி' சொற்றொடரைக் குறிக்கிறது. தத்துவமஸி மகாவாக்கியம் சாந்தோக்ய

உபநிஷத்தில் தந்தை மகனுக்குச் சொல்வதாக அமைந்திருக்கிறது. இது எல்லோர்க்கும் பொதுவானாலும் அத்வைதிகளோடு மிகுந்த தொடர்பு கொண்டது. விசிட்டாத்துவைதிகளான வைணவர்களும் துவைதிகளான மாத்துவர்களும் ஸ்ரீமந் நாராயணனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுபவர்கள். அத்வைதிகளான ஸ்மார்த்தர்கள் மகேசுவர பூசை செய்பவர்கள். வடமொழியில் ஈசுவர நாமம் சிவனுக்கே உரியதாகும்.

நச்சினார்க்கினியர் சைவர், அவரது பெயர் சிவனாரின் திருநாமங்களுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. **'நச்சினார்க்கினியாய் போற்றி'** என்றும் **'நச்சுவார்க்கினியர் போலும் நாகவீச்சுவரனார் தாமே'** என்றும் திருநாவுக்கரசர் தேவாரங்களில் பயின்று வருகின்றமையான் அறியலாம்.

"தூய ஞானம் நிறைந்த சிவச்சுடர்
தானே ஆகிய தன்மை யாளன்"

என்று வரும் *உரைச் சிறப்புப்பாயிரத் தொடர்களால் அவர் சிவனை வழிபட்டவர் என்பதனையும், 'சிவச்சுடர் தானே யாகிய' என்பதனுள் நிற்கும் அத்வைதக் குறிப்பினையும் உணரலாம். மற்றும் டாக்டர் உ. வே. சா. அவர்கள் நச்சினார்க்கினியர் சைவர் என்பதற்குரிய சான்றுகள் பல காட்டியுள்ளார்கள். தொல் எழுத்ததிகார மொழிமரபில் ஓரெழுத்தொருமொழி (12) என்னும் நூற்பாவின் விளக்க உரையில் **திருச்சிற்றம்பலம், பெரும்பற்றப் புலியூர்** எனத் தில்லையம்பதியின் வேறு பெயர்களை ஆறெழுத்தொரு மொழிக்கும் ஏழெழுத்தொரு மொழிக்கும் எடுத்துக் காட்டுக்களாக நல்கியிருக்கிறார். தத்துவக் கருத்துக்களை விளக்கத் திருவாசகம், திருக்கோவையார், திருக்கைலாய ஞான உலா முதலிய நூல்களிருந்து அடிக்கடி மேற்கொள்கள் காட்டுவர்.

---

* இந்நூலின் இறுதியில் உரைச் சிறப்புப்பாயிரம் சேர்க்கப்பட்டுள்ளது. அப்பழம்பாடலிலிருந்தே இக்கட்டுரையின் திரண்ட பிண்டம் தொகுக்கப்பட்டுள்ளது.

அவர் வைதிக பிராமணராயினும், சிவனை வழிபடுபவரா யினும் சமயக் காழ்ப்பில்லாதவர். சமண காவியமான சீவக சிந்தாமணிக்கு உரை எழுதியுள்ளமை இதனை நன்கு விளக்கும். 'அருளொடு புணர்ந்த அகற்சி' என்ற தொல்காப்பியத் தொடருக்கு துறவு என்று பொருள் எழுதி அவ்வருட் துறவுக்குப் புத்தன் துறவையே எடுத் துக் காட்டாக நல்கினார்.

கருவீன்று கிடந்த பெண்புலியொன்று எல்லைமீறிய பசியால் தான் ஈன்ற குழவியையே தின்னத் தொடங் கியது. புத்தனின் அருள் உள்ளம் அதனைக் கண்டு துடித்தது. பசியோடு கிடக்கும் பெண்புலிக்கு இரங்கு வதா? தன் தாய்வாயிலேயே உயிரை இழக்க இருக்கும் மகவிற்காக வருந்துவதா? அதன் கூரிய பற்களுக் கிடையே புகுந்து தன்னையே இரையாகக் கொடுத்த புத் தனின் அருள் உள்ளத்தை என்னென்று வியப்பது! புத் தர் எத்துணை எத்துணையோ பிறவிகள் எடுத்தார். எப்படி எப்படி யெல்லாமோ உயிர்கட்கு உதவினார். இந்த விவரங் களைத்தான் புத்தர் ஜாதகக் கதைகள் கூறுகின்றன. அந்த ஜாதகக் கதைகளில் ஒன்றுதான் மேற் குறிப்பிட்ட கதையுமாகும். இக்கதை யாரோ ஒரு தமிழ்க்கவிஞனின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறது. அதனால் பாடலாக மலர்ந்திருக்கிறது*. அப்பாடலால் ஈர்ப்புண்ட இனியர் அதனை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

---

*புனிற்றுப் பசிஉழந்த புலிப் பிணவு தனாஅது
முலை மருஅக் குழவி வாங்கி வாய்ப்படுத்து
இரையெனக் கவர்ந்தது நோக்கி ஆங்கவ்
ஏரிளம் குழவி முன்சென்று தான் அக்
கூருகிர் வயமான் புலவுவேட்டுத் தொடங்கிய
வாள் எயிற்றுக் கொள்ளையில் தங்கினன் கதுவப்
பாசிலைப் போதி மேவிய பெருந்தகை
ஆருயிர் காவல் பூண்ட
பேரருட் புணர்ச்சிப் பெருமை தானே!

**வீரசோழிய உரைகாரரும் இதனையே மேற்கோளாகக் காட்டி யுள்ளனர்.**

## 3. காலம்.

நச்சிஞர்க்கினியர் பதின்காம் நூற்ருண்டின் இறுதியிலாவது பதினைந்தாம் நூற்ருண்டின் முற்பகுதியிலாவது வாழ்ந்திருக்கலாம். இறையஞர் களவியல் உரைகாரர், உரையாசிரியராகிய இளம்பூரணர், பேராசிரியர் சேஞவரையர் முதலிய உரையாசிரியர்களை இவர் தம் உரையில் ஆங்காங்கு குறித்தும் மறுத்தும் செல்கிருர். எனவே அவர்களுக் கெல்லாம் இவர் பிந்தியவராவார். சேஞவரையர் **'எம்மண்டலமும் கொண்டருளிய மாறவர்மன் குலசேகர பாண்டியன்'** (கி. பி. 1268—1311) காலத்தைச் சேர்ந்தவர் என்பதை மு. இராகவையங்கார் அவர்கள் தம் **'சாசனத் தமிழ்க்கவி சரிதம்'** [1] என்ற நூலிலும் திரு. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் தம் **இலக்கிய வரலாற்றிலும்** [2] குறித்துள்ளனர். சேஞவரையர் கி. பி. 13ம் நூற்ருண்டின் இறுதியிலும் 14ம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவராதலின் நச்சிஞர்க்கினியர் பதின்காம் நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்தவர் என்று ஒருவாறு முடிவு செய்யலாம்.

---

1. பக்கம் 113
2. பக்கம் 36.

# இந்நூலின் நோக்கம்.

இலக்கிய ஆசிரியர்களின் உள்ளத்தைத் தெரிந்து கொள்ள எப்படி முயலுகிறோமோ அப்படியே உரையாசிரியர்களின் உள்ளத்தையும் தெரிந்து கொள்ள முயல வேண்டும். அப்பயிற்சி இலக்கியப் பயிற்சிக்கு உற்ற துணையாக நிற்கும்.

ஒரு பாட்டை எடுத்துக் கொண்டு சொல்லுக்குச் சொல் உரை சொல்லுவதைமட்டும் தமிழ் உரையாசிரியர்கள் மேற்கொள்ளவில்லை. கவிஞர்களின் உள்ளத்தைக் கண்டுபிடிக்கவும் முயன்றிருக்கிறார்கள். அதில் முழுக்க முழுக்க வெற்றியடைந்திருக்கிறார்களா? அது வேறு கேள்வியாகும். திறமையுள்ள உரையாசிரியர் உரை எழுதப் புகுந்தால் அவ்வுரை இலக்கியத்திற்கு நிகராகி விடுகிறது. நிகராகிவிடுவது மட்டுமில்லை சில சமயத்தில் அதுவே இலக்கியமாகவும் ஆகிவிடுகிறது. இலக்கண உரையாசிரியர்களும் இலக்கண ஆசிரியர்களாகவே திகழ்கின்றனர்.

நச்சினார்க்கினியர் பரந்த நூற் புலமையுள்ளவர். அவருக்கு நிகரான புலமையுடையவராக வேறு எந்த உரையாசிரியரையும் குறிப்பிட முடியாது. அப்படிப் பட்ட புலமையாளரின் உரையில் குறைகளும் பல உண்டு. இவ்விருபதாம் நூற்றாண்டில் இணையற்ற அறிஞரேறாக வாழ்ந்த மறைமலை அடிகளார் தம் **முல்லைப் பாட்டுப்** புத்துரையில் நச்சினார்க்கினியரை மிக வன்மையாக மறுத்துள்ளார்.

"சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் அப்போது யாம் தமிழாசிரியராய் இருந்து மாணாக்கர்க்குத் தமிழ் நூல் அறிவுறுத்தி வந்தமையால் இம்முல்லைப்பாட்டிற்கும் உரை விரித்துரைக்கலானேம். இச்செய்யுட்கு நச்சி னார்க்கினியர் எழுதிய உரையையும் கூடவே விளக்கி வருகையில் செய்யுளியற்றிய ஆசிரியர் கொண்ட பொருண்முறை ஒரு பக்கமாகவும், உரைகாரர் கொண்ட பொருண்முறை மற்றொரு பக்கமாகவும் ஒன்றோடொன்று இணங்காதாய் மாறுபட்டு நிற்றல் கண்டு மாணாக்கர் பெரிதும் இடர்ப்படுவாராயினர். அதுவேயுமன்றி ஆக்கியோன் அமைத்த சொற் றொடர் நெறியைச் சிதைத்துச் சொற்களையும் அடை மொழிகளையும் ஒரு முறையுமின்றிப் பிரித்துக் கூட்டிப் பொருள் உரைக்கும் நச்சினார்க்கினியர் உரை சிறிதும் ஏலா உரையேயாம் என்றும் அவர் கருதுவாராயினர்."

(பக்கம் 8)

இவ்வாறு மறைமலை அடிகளார் முல்லைப்பாட்டு முன்னு ரையில் குறித்துள்ளார்கள். நூலாசிரியர் ஒன்று நினைக்க உரையாசிரியர் ஒன்று நினைக்கிறார்; நூலாசிரியன் வைத்த சொல்லமைப்பைச் சிதைக்கிறார்-இவையே அடிகளாரின் குற்றச் சாட்டுக்கள்.

அடிகளாரின் கருத்தை யாரும் மறுப்பதற்கில்லை, நானும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். என்ற லும் நச்சினார்க்கினியர் பக்கத்தில் நின்று அனுதாபத்தோடு சிந்தித்தால் அவரது உள்ளம் இனிது புலப்படும். ஆசிரி யன் உள்ளம் எவ்வழி செல்கிறதோ அவ்வழி உரையும் செல்லவேண்டும். அப்படியிருக்க அதற்கு மாறான தொன்றை நச்சினார்க்கினியர் தெரிந்து செய்கிறாரா? அல்லது தெரியாமலேயே செய்கிறாரா? சொற்றொடர்

நெறியை ஏன் சிதைக்கிறார்? என்ற கேள்விகளுக் கெல்லாம் அனுதாபத்தோடு விடையளிக்க முயலுவதே இந்நூலின் நோக்கமாகும். அனுதாபம் என்றால் அத் தனையும் ஒத்துக் கொள்வது என்று பொருளல்ல. அவ ரோடு உடன்படாத இடங்களும் உண்டு. நிறைநோக் கும் குறைநோக்கும் என்ற தலைப்பில் அவரிடம் அமைந்த நிறையையும் குறையையும் ஓரளவு எடுத்துக் காட்டியுள் ளேன். நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் பார்க் கும் கோணத்திலே நின்று அவர் பார்க்கும் நச்சினார்க் கினியர் இப்படிப்பட்டவர் என்பதையும் அதற்குரிய காரணத்தையும் காட்டியுள்ளேன்.

ஒரு விமரிசகர் உரையாசிரியர் வடிவில் வெளிப்படும் போது எப்படித் தடுமாற்றம் நிகழ்கிறது என்பதை ஆங் காங்கே இந்நூலில் காட்டியுள்ளேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூடிய கீழ்த் திசைக் கலைத்துறை மாநாட்டில் தமிழ்ப்பகுதித் தலைவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் இந்நூலின் சில பகுதிகளைப் படித்துக் காட்டினேன். இவற்றை நூல் வடிவில் ஆக்கித் தரவேண்டும் என்று என்பால் அன் புடைய மாணவர் சிலர் வேண்டினர். அந்நல்லவர்களின் ஆர்வத்தாலேயே இந்நூல் உருவாயிற்று.

*

# நச்சினார்க்கினியர்

## நிறைநோக்கும் குறைநோக்கும்

### 1. விரைந்த செய்தி

**ப**ல்லவ நாட்டரசன் தேசிகப் பாவையின் ஆடல் கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தான். சீவகனும் அங்கே அவள் ஆடல் நலத்தில் ஈடுபட்டிருந்தான். அப்பொழுது திடீரென்று பணியாள் ஒருவன் ஓடோடியும் வந்து பதறியபடி இளவரசியான பதுமையைப் பாம்பு கடித்துவிட்டது என்ற செய்தியைச் சொல்ல முற்பட்டான்.

** ஊனுகுக் கின்றவைவேல் ஒருமகன் உருமிற்றோன்றிக்*
*கானுகுக் கின்றபைந்தார்க் காவலர்த் தொழுதுசொன்னான்*
1266 —*சீவக சிந்தாமணி.*

வேலொடு வந்தான்; இடிபோலத் தோன்றினான்; கைதொழுது சொன்னான். இவ்வளவு பரபரப்பாக வந்தவன் எப்படி அந்தச் செய்தியைச் சொன்னான்? பாம்பு தீண்டிவிட்டது என்பதை முதலில் சொல்லாமல் பதுமை செடி கொடி வளர்த்த செய்தியை ஏழு பாடல்களில் கூறி எட்டாவது பாடலில் கூறவேண்டியதைக் கூறினான்.

பதுமை பொதிய மலையிலிருந்து முல்லைக் கொடியையும் மல்லிகைக் கொடியையும் வரவழைத்துத் தோட்டத்திலே நட்டிருந்தாள். இமயமலைச் சாரலிலிருந்து கருப்

* வை = கூர்மை; உரும் = இடி; பைந்தார் = பசியமாலை,

பூரக் கன்று ஒன்றைக் கொண்டு வரச் சொல்லிவைத்திருந்தாள். இவைகளுக்கெல்லாம் மணி நீரும் மதுவும் ஊற்றி வளர்த்தாள். இவ்வாறு செடிகொடிகள் வைத்து வளர்த்து அழகு பார்ப்பதிலே விருப்பமுள்ள பதுமை ஒரு முல்லைக் கொடிக்குத் தன் தாயின் பெயரைச் சூட்டி வளர்த்துவந்தாள். தாய் பெயரைத் தாங்கிய அக் கன்னி முல்லை அன்றுதான் புதிதாகப் பூப் பூத்தது. அந்தச் செய்தியைத் தோழி ஒருத்தி 'கொம்பலர் நங்கை பூத்தாள்' என ஓடோடி வந்து ஆவலோடு கூறினாள். அதனைப் பார்க்க விரைந்தாள் பதுமை. வழியிலே குராமரம் எழில் பெறப் பூத்துக் குலுங்குவதைக் கண்டாள். என் தோழி பூத்துக் குலுங்குகிறாள் என்று சொல்லிக் கொண்டே ஒரு பூப்பறிக்கக் கைநீட்டினாள். அதிலிருந்த அரவம் அவளைத் தீண்டிவிட்டது. இதுதான் அந்த வீரன் சொன்ன செய்தியின் சுருக்கம். எவ்வளவு வேகமாக வந்தானோ அவ்வளவு வேகமாகச் செய்தியைச் சொல்லவில்லை. 'ஐயையோ பாம்பு கடித்துவிட்டதே' என்று தானே அவன் முதலில் கூறியிருக்க வேண்டும். அங்கிருந்தவர்கள் எப்படிக் கடித்தது? எங்கே கடித்தது? என்ன? என்று விபரம் கேட்ட பின்னர் அவள் செடி கொடி வளர்த்தமையையும் அவற்றுள் பூப் பூத்த முல்லையைக் காணச் சென்றமையையும், அங்கே பாம்பினால் தீண்டப்பட்டமையையும் கூறியிருக்கலாம். ஆனால் திருத்தக்க தேவர் அப்படி எழுதவில்லை. இந்தப் பரபரப்பான வேளையில் முல்லைக் கொடியை எங்கிருந்து வரவழைத்தாள்? அதற்கு நீர் மட்டும் ஊற்றினாளா? மதுக்கலந்தூற்றினாளா? எதனால் வேலி கட்டியிருந்தாள்? அதனைச் சுற்றிக் கற்களைப் பதித்திருந்தாளா? முத்துக்களைப் பதித்திருந்தாளா? என்ற கேள்விகளுக்கெல்லாம் எங்கே இடம்

இருக்கிறது? அப்படியானால் தேவர் இவற்றை யெல்லாம் விடாமல் ஏன் சொல்லுகிறார்?

சீவக சிந்தாமணியில் பதுமையார் இலம்பகத்தில் பதுமையை அங்கேதான் தேவர் படிப்பவர்களுக்கு முதன் முதலாக அறிமுகப் படுத்துகிறார். பதுமையின் திணை கடந்து செல்லும் அன்பைப் படிப்பவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு தேவருக்குள்ளது. செடி கொடிகளிடம் உறவு தோற்றி உயர்திணையையும் அஃறிணையையும் வேறுபாடு கடந்து ஒன்றாகப் பிணைக்கும் அன்பின் ஆற்றலைத் தேவர் இவ்விடத்திலேயே கூறிவிடுகிறார்.

இவை கூறப்பட வேண்டுமா? வேண்டாமா? என்பதில் நச்சினார்க்கினியர்க்குக் கருத்து வேற்றுமை இல்லை.

எது முன்னால் கூறப்பட வேண்டும்? எவை பின்னர் கூறப்பட வேண்டும் என்பதில் அவருக்கும் நூலாசிரியருக்கும் வேறுபாடு எழுகிறது. தேவர் தம் விருப்பம் போலவே நூலைச் செய்தார். உரையாசிரியர் அவர் விருப்பம் போலவே உரை எழுதினார்.

'ஏனய்யா நச்சினார்க்கினியரே எட்டாம் செய்யுள் முதல்வரியைத் தூக்கி முதல் செய்யுளின் மூன்றாவது வரியோடு மாட்டி உரை செய்யலாமா' என்று கேட்டால் நச்சினார்க்கினியர்,

> * "இங்ஙனம் மாட்டுறுப்பாகக் கூறாது செவ்வனே கூறிற் பாம்பு கடித்தமை கடுகக் கூறிற்றாகாமை உணர்க"
> [சிந்தாமணி — 1273 — உரை]

என்று கூறுவதைக் காணலாம். இங்கே மற்றொன்று காணவேண்டும். செவ்வனே கூறுதல் — மாட்டுறுப்

---

* **வைவேல் ஒருமகன் கைதொழுது பாம்பு தீண்டிற்றென்று உருமிற் சொன்னான்.**

பாகக் கொண்டு கூறுதல் ஆகிய இரண்டினையும் எண்ணி ஒரு பயன் நோக்கியே மாட்டுறுப்பைத் தாம் மேற்கொள்வதாகத் தம் செய்கைக்குத் தாமே அமைதி கூறுவதைப் பார்க்கிறோம்.

இக்காலத்து இலக்கிய ஆய்வாளர்களாயிருந்தால் ஆசிரியரின் நூலாக்கத்தில் நேர்ந்த குறைபாடாகவே இதனைக் காட்டியிருப்பர். அவ்வாறு காட்ட விரும்பாதவர் ஆசிரியர் செய்தது சரி என்பதற்கு விளக்கம் ஒன்று சொல்லியிருப்பார். இக்காலத்திய ஆய்வுக்கும் அக்காலத்து விமரிசனத்திற்கும் ஒரு குறிப்பிட்ட வேறுபாடு உண்டு. பழங்கால உரை ஆசிரியர்க்கு நல்ல ஆய்வுள்ளம் இருந்தது என்பதில் ஐயமில்லை. அவர்கள் அக்கருத்துக்களை வெளியிட்ட முறைகளில்தான் வேறுபாடு உண்டு. அவர்கள் வெளியிட்ட முறையை நாம் இப்பொழுது ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் அந்த உயரிய திறமை இருந்தது என்பதைக் கண்டு போற்றிச் செல்ல வேண்டும். நூலாக்கத்தின் 'நெளிவு சுளிவு' எல்லாம் அவர்களுக்குத் தெரிந்தது. சிறப்பும் தெரிந்தது; தளர்ச்சியும் தெரியாமல் இல்லை. அவர்களது ஒரே நம்பிக்கை தாம் எடுத்துக் கொண்ட நூலின் ஆசிரியரை எக்காரணம் பற்றியும் குறை சொல்வதில்லை. ஓர் உரையாசிரியர் மற்றொரு உரையாசிரியரை வன்மையாக மறுப்பார்; கண்டிப்பார்; ஆனால் நூலாசிரியரை மறுக்கமாட்டார். குறை சொன்னால் நூலின் 'பூரணத்துவம்' அதாவது முழுமை கெட்டு

---

எட்டாவது பாட்டில் பாம்பு தீண்டிற்றென்றலும் என்ற தொடரில் நிற்கும் உம்மை கூட இம்மாட்டேற்றால் பயனற்றுப் போகிறது என்றாலும் இதனை இவ்வாறு கூறாமல் இருக்க நச்சினார்க்கினியரால் முடியவில்லை இங்கே நாம் காணவேண்டுவது நிகழ்ச்சி அமைப்பைப் பற்றியும் அவற்றின் பொருத்தம்பற்றியும் எவ்வளவு சிந்திக்கிறார் என்பதேயாகும்.

விடுகிறதாகக் கருதினார்கள். அப்படியானால் நூலாசிரிய னுக்காகத் தங்கள் கருத்துக்களை விட்டுவிடலாமா? அது வும் கூடாது. நூலாசிரியன் பெருமையையும் தாழவிடக் கூடாது. உரை செய்யும் உரிமை தங்களிடம் இருக்கும் போது சும்மா இருப்பார்களா? உரை வன்மையால் அவ்விடரைத் தீர்த்துக்கொண்டனர். தங்கள் கருத்தும் நூலாசிரியன் கருத்தும் இணையாவிட்டால், 'நூலாசிரியன் நினைப்பது இதுதான்' என்று தங்கள் கருத்தையே வலி யுறுத்திச் சொன்னார்கள். விடாப்பிடியாகச் சாதித்தனர். நூலாசிரியன் உள்ளத்தையே மறைத்து விட்டார்கள். இளம்பூரணர் போன்ற உரையாசிரியர்கள் நூலாசிரியன் சொன்ன சொற்களுக்கும் கருத்துக்கும் முரண் ஏற்படா மல் உரை செய்தால் அதுவே போதும் என்று உரையாசிரி யன் கடமையை உணர்ந்து நடந்து கொண்டனர். ஆனால் தனக்கென்ற கருத்தும் தன் கருத்தையே சாதிக்க வேண் டும் என்ற நினைப்பும் கொண்டிருந்தவர்களில் உறுதியான வர் நச்சினார்க்கினியர். தொல்காப்பியர் 'அகர இகரம் ஐகார மாகும்' என்று நூற்பா செய்திருக்க, அகர இகரம் ஐகாரம் ஆகாது என்று உரை எழுதுகிறார் அவர். *இந்தத் துணிவு நச்சினார்க்கினியர்க்குத்தான் இருந்தது. இப்படி

---

* இப் பகுதியைப் படித்துக் காட்டியபோது திரு வெள்ளை வாரணனார் அவர்கள் நச்சினார்க்கினியர் உரை தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அதற்கு வேறு விளக்கமும் உரைத்தார்கள். அதனை நான் ஈண்டு எழுதப் புகவில்லை. ஆராய எடுத்துக்கொண்ட பொருளும் அதுவன் றாதலின் நெடுநாளாகத் தமிழாசிரியர்கள் எவ்வாறு அவ் வுரைக்குப் பொருள் கொண்டார்களோ அப்பொருளையே மேலே குறித்துள்ளேன். சிவஞானமுனிவர் தம் தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில் எழுதியுள்ளதை நோக்குங்கால் நச்சினார்க் கினியர் உரைக்கு அவரும் அவ்வாறே பொருள் கொண்டுள்ளார் என்பது புலனாம்.

எழுதும் அளவுக்குத் தான் காணும் உண்மை வலிவுடைய தென்று அவர் கருதுகிறார். துணிவிருந்தாலும் வழிவழி மரபுப்படி தான் எடுத்துக்கொண்ட 'நூலாசிரியனை எக் காரணம் கொண்டும் குறையுடையவனாகக் காட்ட அவர் முற்பட்டதே இல்லை. தான் உரை செய்யும் வன்மை யால் எதனையும் செய்ய முடியும் என்ற அசையாத நம்பிக்கை உடையவர். இந்த நம்பிக்கையும் துணிவும் தான் பல சமயங்களில் அவரைத் தோல்வியடையச் செய்தன.

இவரிடம் காணப்படும் இந்தத் துணிவும் நம்பிக்கை யும்தான் சிவஞான முனிவருக்குப் பிடிவாதமும் செருக்கு மாகக் காட்சியளிக்கின்றன. சிவஞான முனிவர் தம் **தொல்காப்பிய** முதற் சூத்திர விருத்தியில்,

'நச்சினார்க் கினியார் முதலியோர் போல
யாம் பிடித்ததே சாதிப்பேம் என்னும் செருக்கால்
யாண்டும் மயங்காமையின்"

என எழுதுவாராயினர். ஆனால் அதே நேரத்தில் அவை தாம் அவர் நூலாசிரியர்க்கு நிகரான புலமையும் தானே சிந்திக்கவல்ல திறமையும் உடையவர் என்பதை நிறுவிக் காட்டின.

❋

---

"அகர இகரம் ஐகாரமாகும்" என்புழி ஆகும் என்றதனால் ஆகாது என விலக்கப்படும் என்பாரை, "பன்னீருயிரும் மொழி முதலாகும்" என்புழியும் ஆகும் என்பதனாற் பன்னீருயி ரும் மொழிமுதல் ஆகா என விலக்கப்படும்போலும் எனக் கூறி மறுக்க."

[தொல் - முதற் பாயிரவிருத்தி - சிவஞானமுனிவர்]

## 2. கள்ளும் தேனும்

**சீ**வக சிந்தாமணி இலக்கணையார் இலம்பகத்தில் கீழ்க் கண்ட வரிகள் காணப்படுகின்றன.

> **கள்ளும் தேனும் ஒழுகும் குவளைக்**
> **கமழ்பூ நெரித்து வாங்கிக்**
> **கிள்ளை வளைவாய் உகிராற் கிள்ளி......"**

**[கிளியின் மூக்குப்போன்ற நகத்தால் குவளைப் பூவைக் கிள்ளினன்—கள்ளும் தேனும் ஒழுகும் குவளை—உகிர் = நகம்—வளைவாய் = வளைந்த மூக்கு.]**

'கள்ளும் தேனும் ஒழுகும் குவளை' என்ற தொடருக்கு உரை யெழுதும் நச்சினார்க்கினியர் கள் - தேன் ஆகிய இரண்டினையும் பற்றிச் சிந்திக்கிறார். 'கள்ளவிழ் கோதை' என்று வந்தால் தேன்வழியும் பூமாலை என்று பொருளுரைக்கிறோம். இங்கே குவளையில் ஒழுகுவதாகச் சொல்லும் தேன் வேறு, கள் வேறு! கள்ளும் தேனும் ஒன்றென்றே கொண்டால் பயனின்றிக் கவிஞர் இரண்டு சொல் பெய்துவைத்தார் என்றாகும். உம்மை கொடுத்து எண்ணியதும் தவறாக முடியும். இரண்டனுக்கும் உரிய வேற்றுமை நமக்கு இப்பொழுது புலப்படவில்லை. கவிஞர் என்ன கருதியிருப்பார் என்பதும் தெரியவில்லை. நச்சினார்க்கினியர் பல முறை சிந்தித்த பின்னர் 'கள்ளும்' என்ற சொல்லை இடம் விட்டு இடம் பெயர்த்து விடுகிறார். பிறிதோரிடத்தில் அதனை இணைத்துப் பொருள் செய்கிறார்.

* கிள்ளை வளைவாய் கள்ளும் உகிர்.

[செய்யுளில் நின்றபடி கொண்டால் கள்ளும் என்பது பெயர்ச் சொல்; மாற்றியுள்ள முறைப்படி பெயரெச்சம் அதாவது வினைச் சொல்]

கிளியின் மூக்குப் போன்றது உகிர் என்பதே கருத்து. 'கிள்ளை வளைவாய் உகிர்' என்று செய்யுளில் நின்றவாறே கொண்டால் கிளியின் மூக்கிற்கு உயர்வு கிடைத்து விடுகிறது. நச்சினார்க்கினியரின் உரைப்படி மங்கை நல்லாளின் நகம் உயர்ந்துவிடுகிறது. அவளுடைய உகிரின் தன்மையைக் களவாடிக் களவாடித்தான் கிளி தன் வளைவாயிலே வைத்துக் கொண்டிருக்கிறதாம். இங்கே உரையாசிரியரும் கவிஞராகி விடுகிறார். ஓர் இலக்கியத்திற்கு உரை காணுபவர் அவ்விலக்கியத்தில் தன்னை மறந்து தானும் ஓர் இலக்கிய கர்த்தாவாக ஆகிவிடுகிறார்.

கவிஞன் நிறுத்திய முறையைச் சிதைத்துச் சொற்களை மாற்றிக் கொண்டு கூட்டிப் பொருள் செய்வது சரியா? அது மொழி யியல்பைக் கெடுக்காதா? என்று கேட்கக் கூடும். ஒத்துக் கொள்ளுகிறேன். ஆனால் இப்படிப் பட்ட இடங்களை நோக்கும் போது அவர் கொண்டு கூட்டிப் பொருள் செய்வது கூட நியாயமாகவே படுகிறது.

※

---

* "கிள்ளைவளைவாய்தான் தன் தன்மையைக் கள்ளும் உகிரால்......"

கள்ளும் = களவுகாணும்; கள்ளத்தால் கள்வேம் எனல் (குறள் 282)

2439—நச்சினார்க்கினியர் உரை.

## 3. ஒரு பொருள் இரு சொல்

ஒரே பொருளுடைய இரண்டு சொற்கள் ஓரிடத்தில் வந்துவிட்டால் நச்சினார்க்கினியர் அவற்றைப் பயனின்றி நிற்பனவாகக் காட்டாமல் அவற்றிற்குப் பொருள் வேறுபாடு காட்டிப் புதிய ஆற்றல் கொடுத்து அழகுபடுத்துவதைக் காணலாம்.

பாலைக் கலியில் (17) 'வகை எழில் வனப் பெஞ்ச' என்ற தொடரொன்று வருகிறது. அதில் வனப்பு, எழில் என்ற இரு சொற்களும் அழகு என்ற பொருளையே உணர்த்துகின்றன. ஆனால் இரு சொல்லுக்குமே 'அழகு' 'அழகு' என்று பொருள் எழுதினால், சொல்லுக்குச் சொல் பொருள் சொல்லும் தமிழாசிரியருக்கும் நச்சினார்க்கினியர்க்கும் என்ன வேற்றுமை? வகை என்ற சொல் அவருக்கு ஒரு குறிப்பை நல்குகிறது. வகை எழில் என்பதற்கு உறுப்பழகு என்றும் வனப்பு என்பதற்குத் தோற்றப் பொலிவு என்றும் பொருள் எழுதினார்.

சிலர் பொதுவாகப் பார்ப்பதற்கு எடுப்பாகவும் அழகாகவும் இருப்பார்கள். தனித்தனியாக அவர்களது உறுப்பினை நோக்கினால் அவை மிக மிக அழகானவை என்று சொல்ல முடியாமல் இருக்கும். மிக உயர்ந்த உறுப்புக்கள் வடிவு பெறாவிட்டாலும் எடுப்பான தோற்றப்பொலிவைப் பெற்றிருப்பார்கள், சிலருக்கு உறுப்புக்கள் அனைத்துமே

அழகாக அமைந்துவிட்டாலும் அவற்றை ஒருசேர நோக்கும்போது கவர்ச்சியான ஒரு பொதுப் பொலிவு தோன்ருமல் போய்விடும். ஒவ்வொரு உறுப்புக்களின் அமைப்புக்கும் அழகுக்கும் ஏற்ப பிற உறுப்புக்களும் அமைந்து கவர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். எனவே தோற்றப் பொலிவும் இன்றியமையாதது. அதனை சமுதாய சோபை என்பர். சமுதாயம் என்ற சொல்லுக்குக் கூட்டம் என்பது பொருள். சோபை அழகாகும். சிலரைப் பார்த்தவுடனே "ஆகா யாருக்கும் இல்லாத கண்; அந்தக் கண்கள்தாம் கண்கள்; அழகு மூக்கு; சிற்பம் போலக் கைவிரல்கள்", என்றெல்லாம் கூறத் தொடங்கி விடுகிறோம். இதுதான் உறுப்பழகு. 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்று வரும் கம்பன் பாடல் இந்த உறுப்பழகையே வியந்துரைப்பதாகும். இதனை அவயவ சோபை என்பர். அவயவம் என்ற சொல்லுக்கு உறுப்பு என்பது பொருள். இப்படித் தோற்றப் பொலிவும் உறுப்பழகும் ஆகிய இரண்டுமே சேர்ந்து அமைந்துவிட்டால் அப்புறம் கேட்க வேண்டுமா? அவள் அழகின் தெய்வமாகிவிடுகிருள். கவிஞன் தலைவியை அழகின் தெய்வமாக ஆக்கிஞனே இல்லையோ நச்சிஞர்க்கினியர் ஆக்கிவிடுகிருர்.

கவின் நலம் முதலிய தொடர்களுக்கும் இவ்வாறே பொருளுரைக்கிருர். மற்ருேரிடத்தில் (கலி 24) 'இன்தீங் கிளவியாய்' என்ற தொடரொன்று வருகிறது. அதில் **இன் தீம்** என்ற இரு சொற்களுக்கும் இனிய தீவிய என்பன பொருளாம். நச்சிஞர்க்கினியர்,

**இன் கிளவி = பின்பு காரியத்தால் இனிய கிளவி**
**தீங் கிளவி = கேட்ட காலத்தில் இனிய கிளவி**

என வேறுபாடு காட்டி உரைப்பதைக் காணலாம். சிலர் பேசும்போது இனிக்க இனிக்கப் பேசுவார்கள். மலையைப் புரட்டி உனக்காகக் கடலில் வைக்கப் போகிறேன் என்பார்கள். நீதான் உயிர் என்பார்கள். கடைசியில் பார்த்தால் ஒன்றும் இராது. சிலருக்குத் திறமையாகச் சொல்லத் தெரியாது; செய்வார்கள். ஆனால் சிலரால் மட்டுமே இனிமையாகச் சொல்லவும் அதேபோல் செய்யவும் முடியும். திறமையும் உண்மையும் சேர்ந்து சிலரிடம் பொலிவு பெறும். இந்தக் கருத்தை இங்கு காட்டி உரைசெய்வது பாராட்டத் தக்கதாம்.

*

## 4. நச்சிஞர்க்கினியர் காணும் காமக் கடவுள்.

காம உணர்ச்சியைத் தூண்டுபவன் மன்மதன் ஆவான். நல்லவர்கள் உணர்ச்சியைத் தூண்டுபவனும் அவனே; செய்யத்தகாதன செய்தொழுகும் தீயோர்கள் உணர்ச்சியைத் தூண்டுபவனும் அவனே. அப்படியாஞல் காமனை நல்லவன் என்று சொல்லுவதா? கெட்டவன் என்று சொல்லுவதா? காமனை வெல்ல வேண்டும் வெல்லவேண்டும் என்று அடிக்கடி பெரியோர்கள் வற்புறுத்துகிருர்களே அதன் பொருளென்ன? *"**மீனேறுயர்த்த கொடிவேந்தனை வென்றபொற்பின் ஆனேறனையான்**" என்று சீவகன் புகழப்படுகிருனே; அங்ஙனமாயின் காமனை வென்றுயர்தலும் ஒரு சிறப்பாகத்தானே கூறப்பட்டுள்ளது?

மன்மதனைக் கற்பனை செய்த முன்ஞேர்களின் அறிவு சான்ருண்மை மிக்க நுண்ணறிவாகும். காம உணர்வை எவை எவை தூண்ட வல்லனவோ அவற்றையெல்லாம் அவனுக்கு அம்பாகவும் வில்லாகவும் நாணுகவும் ஆக்கிக் கொடுத்தனர். திங்கள் குயில் அனைத்தையும் அவஞேடு தொடர்பு படுத்தினர். அனங்கனின் வேலை உயிர்கள் அனைத்திற்கும் காம உணர்வை ஊட்டுவதேயாகும். எல்லா உயிர்கட்கும் அவ்வுணர்வை ஊட்டுவானே

---

*** மீனேறுயர்த்த கொடிவேந்தன் = மீன்கொடியுடைய மன்மதன்; வென்றபொற்பு = வென்ற மேன்மை; ஆன் ஏறு அனையான் = காளையை ஒத்த சீவக நம்பி.**

யன்றித் தான் எக்காலும் ஊட்டப்படான். அதனினும் மேலாக மற்றொன்று கருதுதற்குரியது. மன்மதனைப் படைத்தவர்கள் அவனைத் 'தம்பதி சமேதராக'வே காட்டியிருக்கின்றனர். எனவே காமக் கடவுள் இல்லறநெறியினன்; நெறியில் நீங்கா நிலையினன். வரன்முறைக்குட்பட்டு நெறி பிறழாது வருகின்ற இன்பத்தையே அவன் விரும்பி ஓம்புபவனாவான். ஒழுக்கத்தோடு இயைந்து வளர்ந்த உள்ளமே மன்மதக் கற்பனையை முழுமை செய்தமைத்திருக்கிறது.

கண்ணில்லாமல் காமக் கடவுளைப் படைத்த மக்கள் உண்டு. அவர்கள் நினைப்புப்படி காமம் கண்ணுடையதன்று என்று பொருள்படும். அப்படிப் பொருள்படுமாயின் அவர்கள் நினைந்த காமம் விலங்குகளின் காமமேயாகும். பொருந்தாத பெருந்திணைக் காமத்திற்குத்தான் கண் கிடையாது. நெறியுடைய காமத்திற்கு மிக விளக்கமான கண் உண்டு. எனவே அக்கடவுளர் பிழைபட்ட காமத்தை எடுத்துக் காட்டுபவராகும். ஆனால் நம்மவர்கள் நினைந்துகொண்ட மன்மதன் கண்ணுடையவன். பிற பெண்டிரை நினைந்து காமுறாதவன். அழகோடு ஒழுக்கம் இணையவேண்டும். அவ்வாறு இணையாத அழகு சூறையாடத் தொடங்கி உலகை அழிவுப் பாதையில் திருப்பிவிடும்.

பௌத்த சமயத்தில் மாரன் என்பவன் அடிக்கடி குறிப்பிடப்படுகிறான். அவன் கொடியவன் என்றும் உணர்ச்சிகளைத் தூண்டுகிறவன் என்றும் பேசப்படுகிறான். அவன் நாம் குறிப்பிடும் மன்மதன் இல்லை. அங்கே ரதி என்பவள்தான் காமக் கடவுளாவாள். அவள் கொடியவனாகிய மாரனின் மகள் என்று கூறப்பட்டுள்ளாள். ஆனால் நம்

முடைய மாரனே இறைவனின் மகனைகச் சொல்லப்படு கிருன். நாம் காமத்தின் தலைமை நிலையை ஆண்மையிடம் தான் ஒப்புவித்துள்ளோம்.

இக்கருத்தினைத் தமிழ்க் கவிஞர்கள் நன்கு உணர்ந் திருக்கிறார்கள். "காமனும் விரும்பும் காமர் சேயிழை"- [பெருங்கதை] என்பதன்கண் உள்ள உம்மை உயர்வு சிறப்பும்மையாகும். இங்கு உம்மை குறிக்கும் உயர்வு யாது? அழகின் உயர்வா? அன்றி உறுதியாகிய உயர்வா? அழகுமிக்க காமனும் என்று பொருள் எழுதுவதா? அன் றேல் உறுதிமிக்க காமனும் என்று பொருள் எழுதுவதா? நச்சினார்க்கினியர் திருவுள்ளப்படி எழுதினால் பிற பெண் டிரை நோக்காத உறுதியுடைய காமனும் இவ்வழகு நலமுடையாளைக் காணப்பெறின் உறுதி நெகிழ்ந்து காம வயப்படுவன்" என்று எழுதவேண்டும். எழில் மிக உடையாரைக் காணினும் காமுறுத ஒருவனுக்கு எடுத்துக் காட்டாக மன்மதனைக் கூறுவதே ஈண்டு நோக்கத்தக்கது. சீவக சிந்தாமணிக்கு உரையெழுதுங்கால் நச்சினார்க்கினி யர் இக் கருத்தினை மறவாமல் அங்கங்கே நயம்பட உரைத் துச் செல்கிறார்.

சீவகன் பல்லவ தேயத்திலே நுழைந்தபோது திறந்த வெளியிலே சந்தனக் காவிலே அமைந்த ஆடரங்கத்தில் தேசிகப் பாவை என்ற பரத்தை ஆடிக் கொண்டிருந் தாள். அந்த ஆடலைச் சீவகனும் சென்று காண்கின்றான். புதியனாக வந்த அவனைப் பார்த்த மக்கள் அவன் அழகு நலத்தில் ஈடுபட்டு வியக்கின்றனர். 'இத்தகைய அழகன் யார்?' என்று ஐயுறுகிறார்கள்.

**"கைவளர் கரும்புடைக் கடவுளா மெனின்**
**எய்கணை சிலையினோடு இவன்கண் இல்லையால்"**
**—1263. *சிந்தாமணி.***

"இவன் ஒரு வேளை மன்மதனாக இருப்பானோ; மன்மதனென்றால் கையில் வில்லைக் காணவில்லையே" என்று கேட்கிறார்கள் மக்கள்.

**'கைவளர் கரும்புடைக் காமன்'** என்பதற்குப் பொருள் கூறினால் 'கையிலே வளர்ந்த கரும்பினை வில்லாக உடைய காமன்' என்று உரைக்கலாம். இப்படி உரைத்தால் மிகுந்த பொருட் சிறப்பு ஏற்படாமையை உணர்ந்த நச்சினார்க்கினியர் கை என்பதற்கு ஒழுக்கம் என்று பொருளுரைத்து "இல்வாழ்க்கை வளர்தற்குக் காரணமான கரும்பையுடைய காமன்" என்று எழுதிச் செல்கிறார். காமவேளின் பெருமையைப் புலப்படுத்துவதன் மூலம் நச்சினார்க்கினியர் சீவகன் பெருமையை ஈண்டு ஒரு படி உயர்த்திக் காட்டுகிறார்.

அனங்கமாலை ஆடுவதற்கு அரங்கேறினாள். தேவர் கூறுவது போல ஆடவர் நெஞ்சமென்னும் அரங்கிலே ஆடவந்தாள். ஒரு பெருமகன் அரங்கேறி ஆடுமகளை ஒப்பனை செய்வது வழக்கம். அனங்கமாலைக்கு ஒப்பனை செய்யுமாறு சீவக நம்பி அழைக்கப்பட்டான். ஆடை திருத்தினான்; நுதற்பட்டம் கட்டினான்; வளையல் அணிந்தான்; சந்தனம் பூசினான்; வளமலர் சூட்டினான். இப்படி ஒன்றொன்றாகத் தீண்டித் திருத்தினான். நச்சினார்க்கினியர் இச் செயலை நினைந்து பார்க்கிறார்.

சீவகன் இப்பொழுதுதான் முதன் முதலாக ஒரு பெண்ணைத் தொடுகிறான். அவனுக்கு இன்னும் ஒரு திருமணம் கூட நடக்கவில்லை. பிரமச்சாரியாக இருக்கும் அவன் ஒரு பெண்ணைத் தொட்டு, அவள் காலைத் தீண்டிக் காற்சிலம்பு அணிந்து, சாந்து பூசி, அழகு நலம் செய்கிறானே என்று நச்சினார்க்கினியர் தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறார்.

காந்தருவதத்தை சீவகனைக் கண்டு காதல் கொண்ட போது அவனை இதுவரை எந்த மகளும் காதலித்து உரிமையாக்கிக் கொள்ளவில்லை என்பதையும் அவனும் யாரையும் காதலிக்கவில்லை என்பதையும் நினைத்து, அதனைப் பொறுத்தவரை தனக்கே பெரும்பேறு வாய்த்திருக்கிறது என்றும் கருதி உவகை கொள்ளுகிருள். இக் கருத்தைக் கூட அவள் மிக வெளிப்படையாகக் கூறிவிடவில்லை. நச்சிஞர்க்கினியர்தான் கண்டுரைக்கிருர்.

''தீங்கரும் பெருத்தில் தூங்கி ஈயின்றி இருந்த தீந்தேன்
நாம் கண்ணுற் பருகியிட்டு நலனுணப்பட்ட நம்பி''

என்பது காந்தருவதத்தையின் வாசகம். ''கரும்பின் கழுத்திலே தூங்குகின்ற தேனீ மொய்க்காத தேனடை'' என்று குறிப்பிடுகிருள். இதற்கு விளக்கம் எழுதுங்கால் நச்சிஞர்க்கினியர்,

"இதற்கு முன்பு ஒருமகளிரும் இவனை நுகராதிருந்தமை உணர்ந்து, 'ஈயின்றி இருந்த தீந்தேன்' என்ருள். எனவே பிரமசரியம் கூறிஞர்."

என்று எழுதுகிருர். இதன் மூலம் தேவர் சீவகனின் பிரமசரியம் கூறியதாகக் குறிப்பிடுகிருர். காந்தருவதத்தைதான் அவன் முதல் மனைவி. அவளை மணப்பதற்கு முன்னர்தான் அனங்கமாலையைச் சந்திக்கிருன்.

''பரியகம் சிலம்பு செம்பொற் கிண்கிணி பாதம் சேர்த்தி
அரிவையை அரம்பை நாண அணிந்தனன் அனங்கனன்
[ஞன்''

தேவலோகத்து அரம்பையே நாணும்படியாக ஒப்பனை செய்த இளவலை மறக்க முடியாமல் காதலால் துடிக்கிருள் அனங்கமாலை. சீவகனின் பிரமசரியம் இவ்விடத்தில் கெடாமல் இருந்தமையைக் காட்டத் துடிக்கும் நச்சிஞர்க்கினியருக்குச் செய்யுளிலே **அனங்கனன்ஞன்** என்ற

சொற்றொடர் கிடைத்துவிடுகிறது. அரிவையை [அனங்க மாலையை] அரம்பை நாண அனங்கனன்னான் அணிந்தான் என்று தேவர் கூறுவதைக்கொண்டு உரையாசிரியர் 'பிரமசரியத்தை' மாசுபடாமல் ஆக்கிக் காட்டுகின்றார்.

"இவளைத் தீண்டவும் வேட்கை நிகழாமையின் அனங்கனன்னான் என்றார். 'சிலைவல்லான் போலும் செறிவினான்' [கலி 143] என்றார் பிறரும்" என்பது அவர் உரை.

சீவகன் அனங்கமாலையைத் தொட்டான்; திருத்தினான். ஆனால் தொட்டவன் மனத்திலே எந்தவிதமான மாறுபாடும் நிகழவில்லை. தொடப்பட்டவள் மாறுபாட்டிற்குள்ளானாள். அனங்கமாலையால் அந்த 'ஸ்பரிச' சுகத்தை மறக்கமுடியவில்லை. அதிலே ஈடுபட்டுத் தன்னை மறந்துவிடுகிறாள். சீவகன் உள்ளம் மருப்படாமலேயே இருக்கின்றது. உள்ளத்தின் வழி இயங்குவது உடலாகலின் அவனுடைய பிரமசரியம் மாசுறாமலேயே இருக்கிறது. அதனால் அவன் உறுதியுடைய காமக் கடவுளுக்கு நிகராகி விடுகிறான்.

நச்சினார்க்கினியர் 'அனங்கனன்னான்' என்பதைச் சீவகனின் பெயர்களில் ஒன்றாகக் கருதிக் கூறும் இடங்களும் உண்டு.

*

## 5. ஒற்றுமையில் வேற்றுமை

தமிழ் மக்களின் களவியல் முறை வடநூலார் கூறும் பிரமம் பிரசாபத்தியம் முதலான எண்வகை மணத்துள் கந்தருவ மணத்தை ஒத்திருக்கும் என ஒப்புமை கூறினர்.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்
காமக் கூட்டம் காணுங் காலை
*மறை ஓர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே.

என்பது சூத்திரமாகும். உரை எழுதிய நச்சினார்க்கினியர் ஒற்றுமையை எடுத்துக் கூறுவதோடு நின்று விடாமல் தொல்காப்பியருக்கு ஒரு படி மேற்சென்று ஒற்றுமைக்குள் அமைந்து கிடக்கும் அடிப்படை வேற்றுமை ஒன்றனையும் அழகுறப் புலப்படுத்திக் காட்டினர்.

"கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும்
பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே
அமையாதென்றற்குத் துறையமை என்றார்"

என விளக்கம் எழுதினர். கந்தருவ முறையில் உளம் ஒத்த காதல் உண்டு; ஆனால் காதலர்கள் மணக்கத் தான் வேண்டும் என்ற கட்டாயமில்லை. தமிழ்முறைப் படி காதல் தொடங்கினால் அது கற்பு வாழ்க்கை பெற்றே

* வேதத்தை ஓர்கின்ற வடநாட்டுத் திருமணங்கள் எட்டனுள்; நல்லியாழ்த்துணைமையோர் = யாழ் பயிலும் கந்தருவர்.

முடியும்; பெற்றால்தான் சிறக்கும், காதலனும் காதலி யும் கணவனும் மனைவியுமாக ஆனால்தான் தமிழுள்ளம் அந்தக் காதலை ஏற்றுப் போற்றுகிறது. களவு தொடங்கி களவிலேயே நின்றுவிடுமானால் மனிதன் விலங்கு நிலையைத் தானே அடைகிறான். துறை என்ற சொல்லிலேயே ஒழுக்கம் என்ற பொருட்குறிப்பு அடங்கியிருப்பதை ஈண்டு அறிந்து மகிழலாம். உயிரினும் மேலாக ஒழுக் கத்தை ஓம்பிய தமிழ் நெஞ்சத்தை அறிந்து உரைசெய்த நச்சினார்க்கினியர் பாராட்டத் தக்கவராவர்.

❊

# 6. நச்சினார்க்கினியரும் தொல்காப்பியமும்

இலக்கியங்கட்கு உரை எழுதும்போது அவர் கண் முன்னால் தொல்காப்பியம்தான் வந்து நிற்கிறது. தொல்காப்பியத்தைத் தள்ளிவிட்டு அவர் இலக்கியத்தைப் பார்க்கவில்லை. எல்லா இலக்கியங்கட்கும் தொல்காப்பியத்தினின்றே விதி சொல்கிறார். தொல்காப்பியமும் அகத்தியமுமே நிரம்பிய இலக்கணத்தன; பிறர் கூறிய நூல்கள் எல்லாம் நிரம்பிய இலக்கணத்தன அல்ல என்று அழுத்தமாக நம்பினார். புது நூல்களை அவர் விரைந்து ஏற்றுக் கொள்ளும் இயல்பு நச்சினார்க்கினியரிடம் இல்லை என்ற முறையில் அவர் ஒரு பழைமை வாதிதான் என்றாலும் அவர் பற்றிய பழைய நூல்கள் காலத்தால் பின்னுக்குத் தள்ள முடியாத நூல்களாம். என்றென்றும் புதுப் பொலிவோடும் வலிவோடும் நிற்க வல்லன. ஆதலின் அவர் பழைமைப்பற்று வெறுக்கத்தக்கதன்று.

சீவக சிந்தாமணிப் பாடல்களைப் பொதுவாக விருத்தப் பாக்கள் என்று கூறலாம். நச்சினார்க்கினியரோ அவ்வாறு கூறவில்லை. விருத்தப்பா என்ற பெயரும் இலக்கணமும் தொல்காப்பியச் செய்யுளியலில் கூறப்படவில்லை. தொல்காப்பியத்தை வழிகாட்டியாகவும் திருத்தக்கதேவரைச் சங்கத்தைச் சேர்ந்தவராகவும் கொள்ளும் நச்சினார்க்கினியர் அப்பாடல்களைக் கொச்சகக்கலி இலக்கணத்துள் அடக்கிக் காட்டிவிடுகிறார். *

---

* "இத்தொடர்நிலைச் செய்யுள் தேவர் செய்கின்ற காலத்திற்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் ஆதலானும், 'முந்து

சீவக சிந்தாமணியைக் காப்பியம் என்று சொல்லலாமா? என்று கேட்டால் சொல்லக் கூடாது என்றே நச்சினார்க்கினியர் விடையிறுக்கிறார். தொடர்நிலைச் செய்யுள் என்பதே தொல்காப்பிய இலக்கண நூலிற் காணப்பெறுவதாகும். காப்பியம் என்ற வடமொழிச்சொல் காணப்படவில்லை. ஓரிலக்கியத்திற்கு அவ்விலக்கியம் தோன்றியபின் வந்த இலக்கண நூல்களை வைத்துக்கொண்டு இலக்கணங் கூறக் கூடாதென்பது அவர் கொள்கை. பழைய இலக்கண நூல்களில் காணப்படாத ஒரு சொல்லால் — வட சொல்லால் — பழைய இலக்கியங்கள் அழைக்கப் பெறலாகா என்று கருதுகிறார்.

> "முந்து நூல்களில் காப்பியம் என்னும் வடமொழியால் தொடர்நிலைச் செய்யுட்குப் பெயரின்மையும், இதற்குப் பின்பு கூறிய நூல்கள் இதற்கு விதியன்மையும் உணர்க"

என்றெழுதிய அவரது உரையான் இதனை அறியலாம். சிலப்பதிகார உரைகாரராகிய அடியார்க்கு நல்லார் முந்து நூல்களில் காப்பியம் என்ற சொல் இன்றேனும் பொருந்தும் என்ற முறையால் தொடர்நிலைச் செய்யுட்களைக் காப்பியம் என்று அழைக்கலாம் என்று கருதுகிறார். * அடியார்க்கு நல்லாரை ஈண்டு நச்சினார்க்கினியர் மறுத்துள்ளமை காணலாம்.

---

நூல் கண்டு முறைப்பட எண்ணி' என்றதனைல் அகத்தியத்தின் வழிநூல் தொல்காப்பிய மாதலானும் பிறர் கூறிய நூல்கள் நிரம்பிய இலக்கணத்தன அன்மையானும் அந்நூலிற் கூறிய இலக்கணமே இதற்கிலக்கணம் என்றுணர்க."

"...........பழையதொரு கதைமேல் கொச்சகத்தாற் கூறின் அது தோல் என்று கூறினமையின் இச்செய்யுள் அங்ஙனம் கூறிய தோலாம் என்றுணர்க."

— சீவகசிந்தாமணி - கடவுள் வாழ்த்து
நச்சினார்க்கினியர் உரை.

* சிலப்பதிகாரம் உரைப்பாயிரம் – அடியார்க்கு நல்லார் உரை.

எப்படித் தொல்காப்பியத்தைத் தள்ளிவிட்டு அவர் இலக்கியத்தைப் பார்க்க முடியவில்லையோ அப்படியே இலக்கியத்தைத் தள்ளிவிட்டுத் தொல்காப்பியத்தை அவரால் பார்க்கமுடியவில்லை. எல்லா இலக்கியப் பரப்பும் தொல்காப்பியத்திற்குள் அடங்கிவிடவேண்டும் என்று நினைக்கிறார். தொல்காப்பிய விதிகளை அகலப்படுத்துகிறார். அது நமக்குச் சில சமயம் பிடிக்காமல் போய் விட்டாலும் அவர் ஒரு வறட்டு இலக்கண ஆசிரியரல்லர் என்பதைப் புலப்படுத்துகிறது. ஆழ்ந்த இலக்கியப் பயிற்சியோடு இலக்கண உண்மைகளைக்கண்டறிந்து விளக்கம் செய்யவேண்டும் என்று அவர் கருதுகிறார். சேனாவரையர் இலக்கிய வழிச் சென்று இலக்கண நூலை விளக்கம் செய்யவில்லை என்று நச்சினார்க்கினியர் குற்றம் சாட்டுகிறார். அதனால் சேனாவரையருக்கு இலக்கியம் தெரியாது (சான்றோர் செய்யுள் வழக்குணராதவர்) என்று கூடச் சொல்லத் தொடங்கி விடுகிறார்.*

புறத்திணை இயலில் (75ம் நூற்பா) இருக்கு, யசுர், சாமம் முதலிய வேதங்கள் தலையாய நூல்கள் என்றும் அகத்தியம் தொல்காப்பியம் முதலாயின இடையாய நூல்கள் என்றும் நச்சினார்க்கினியர் கூறினர். அவர் அவ்வாறு கூறியதால் தொல்காப்பியத்தைக் குறைத்துவிட்டார் என்றோ தமிழ் நூல்களை இழிவுபடுத்திவிட்டார் என்றோ சிலர் கூறுவதைக் கேட்டுள்ளேன். அது பொருந்தாது. நச்சினார்க்கினியரின் தமிழ்ப் பற்று ஐயுறத்

---

* "சேனாவரையர் இவற்றை உவம உருபு அன்று என்றும் உவம உருபுகளை இரண்டாவதுகொண்டு முடியாது என்றும் கூறினாரால் எனின் அவர் ஆசிரியர் கருத்தும் சான்றோர் செய்யுள் வழக்கும் உணராமல் கூறினர்"

— 414-தொல்-சொல்-எச்சவியல்-நச்சினார்க்கினியர் உரை.

தக்கதன்று. சங்கத் தமிழையும் மற்ற இலக்கியங்களையும் அவர் குறிப்பிடும்போதெல்லாம் 'சான்றோர் செய்யுட்கள்' என்று குறித்தனர். தமிழ் இலக்கியத்தினிடத்தும் தமிழ்ப் புலவர்களிடத்தும் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை அது நன்கு விளக்க வல்லதாகும். நூல்களைத் தலை, இடை, கடை என்ற பாகுபாடு செய்யும்போது 'ஆன்மீக நோக்கி'னின்று அதனைச் செய்கிறார் என்பதனை உணர வேண்டும். சமய நோக்கிலே நின்று காண்பார்க்குக் கல்வியின் பயன் உயிர்க்கு உறுதி தேடுவதே என்பதும் நூல் எனின் மறுமைக்குரியது கூறிற்றாதல் வேண்டும் என்பதும் விளங்கும். அவ்வாறு நின்று காணும் நச்சினார்க்கினியர்க்கு மூன்று வேதங்கள் தலையாய நூல்களாகத் தோன்றுவதில் வியப்பில்லை. வேதம் என்பதற்காக எல்லா வேதங்களையும் தலையாய நூல் என்னாது அதர்வ வேதத்தை இடையாய நூலாகக் கூறியிருத்தலும் அதற்கு அவர் காட்டும் காரணமும் காணத்தக்கனவாம். அவருடைய பார்வைக்கு வேற்றுச் சமயக் கொள்கைகளை மறுத்துக் கூறும் 'பரபக்க' நூல்களும், புராணங்களும் கூட கடையாய நூல்களாகி விடுகின்றன,

இலக்கிய இன்பம் ஒன்றிற்காக மட்டும் அணுகி மகிழும் போக்கை நாம் எப்படி எதிர்பார்க்கமுடியும். இலக்கிய இன்பத்திற்கும் மேலாக நிலையானதோர் இன்பம் ஒன்றுண்டு எனக் கனவு கண்டு அதனை நூற்கள் காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கும் மனித உள்ளத்தை நாம் எப்படிக் குறைகூற முடியும்?

> "எழுத்தும் சொல்லும் பொருளும் ஆராய்ந்து
> இம்மைப் பயன் தருதலின் அகத்தியம், தொல்காப்பியம்
> முதலிய தமிழ்நூல்களும் இடையாய ஓத்தாம் என்றுணர்க."

என்பது அவரது உரையாகும். அடுத்து மூன்று சங்க அமைப்புக்களை ஒட்டியும் நூல்களை முத்திறப்படுத்தியுள்ளார் என்பதறியலாம். இம்மைப் பயன் தருதலின் இடையாய ஒத்து என்று எழுதியுள்ளமையின் மறுமைப் பயனையும் நூற்கள் காட்டவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றமை யறியலாம்.

## 7. நச்சினார்க்கினியரும் சேனாவரையரும்

**சே**னாவரையர் ஒரு நல்ல இலக்கண உரைகாரர். நச்சினார்க்கினியரோ ஒரு நல்ல இலக்கிய உரைகாரர். இலக்கிய உரைகாரர் இலக்கண உரைகாரராகும்போது தடுமாற்றம் ஏற்படுகிறது. தோல்வி நேர்கிறது. அதற்குப் பல காரணங்கள் கூறினால் அவரது பரந்த இலக்கியப் புலமையையும் ஒரு காரணமாகச் சொல்லலாம். சேனா வரையர் உரை கொண்டு கூட்டாமலும் மாட்டாமலும் படிப்படியான வளர்ச்சியோடு விளக்கமாகச் செல்கிறது. தொல்காப்பிய உரைகாரர் என்ற முறையில் சேனாவரை யரைத்தான் சிவஞானமுனிவர் மதித்துப் போற்றுகிறார். வடநூற் கடலின் நிலை கண்டறிந்த சேனாவரையர் எழுத் ததிகாரத்திற்கு உரை வகுக்கவில்லையே, வகுத்திருந்தால் மற்ற உரையாசிரியர்களால் நேரும் மயக்கங்கள் நேர்ந் திருக்க மாட்டாவே என்று வருந்துகின்றார் *. சேனா வரையரை மறுக்கும்போது கூட மரியாதை காட்டுகிறார்.

---

* "வடநூற்கடலை நிலைகண்டறிந்த சேனாவரையர் எழுத்ததி காரத்திற்கு உரை செய்தாராயின் இன்னோரன்ன பொருள் அனைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர். அவர் சொல்லதிகாரம் போலப் பெரும்பயன் படாமை கருதி எழுத்திற்கு உரை செய்யாது ஒழிந்தமையின் தமிழ்நூல் ஒன்றே வல்ல உரையாசிரியரை உள்ளிட்டோர் உரையை ஆசிரியர் கருத் தாகக் கொண்டு பின்னுள்ளோரும் மயங்குவாராயினர்."

— சிவஞான முனிவர் - தொல் - சூத்திரவிருத்தி.

மறுக்கிறோம் என்ற சிறு வருத்தம் அவர் உள்ளத்தில் தோன்றுகிறது. அதனால் ஒன்றிரண்டு இடங்களை மறுப்பதால் அவர் பெரும் புலமை இழுக்குறாது என்று அமைதி கூறுகிறார். சேனாவரையரிடம் சிவஞான முனிவர் கொண்ட கவர்ச்சிக்கு சேனாவரையரின் வடமொழிப் புலமையும் ஒரு காரணம் ஆகலாம். சிவஞான முனிவர் வடமொழியும் தமிழும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். தன் முன்னோடிகளில் தன்னைப்போல இருமொழிப் புலமை நன்குடையவர் சேனாவரையரே என்று கண்டார். மற்ற உரையாசிரியராகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலாயினோர் தமிழ் ஒன்றுமட்டுமே அறிந்தவர்கள் என்று நகை தோன்றக் கூறினர். நச்சினார்க்கினியர் வடமொழியில் மிக மேம்பட்ட புலமை உடையவராக இல்லாதிருந்திருக்கலாம்; ஆனால் வடமொழியே தெரியாதவர் என்று முடிவு கட்டுவதற்கில்லை. சீவக சிந்தாமணி உரையில் வடமொழியிலிருந்து எடுத்துக் காட்டுகள் நல்கியிருக்கின்றமை காணலாம்.

வட நூற் கடலும் தென் நூற் கடலும் நிலை கண்டறிந்தவர் சேனாவரையராயினும் வடமொழி வெறியுள்ளவர். நச்சினார்க்கினியர் பிராமணராயினும் வடமொழி வெறியில்லாதவர். ஒருவாறு சாதிப்பற்று சிறிது இருந்திருக்கலாம் என்பதை ஒத்துக்கொண்டாலும் தமிழ்ப்பற்று மிகுதியும் உடையவர் என்பதை மறுத்தற்கில்லை. சேனாவரையர் காலம், உலகம் என்ற சொற்களை வடமொழிச் சொற்கள் என்று கருதுவாராக, நச்சினார்க்கினியரோ,

"காலம் உலகம் என்பன வடசொல் அன்று;
ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம்
கூறுார் ஆகலின்."

என மறுத்துக் கூறினர். வடமொழிச் சொல் லோகம் என்பது. அது தமிழிலே வரும்போது உலோகம் என்று வருமேயொழிய உலகம் என்று வருதற்கில்லை. எனவே உலகம் என்பது தமிழுக்கே உரிய சொல்லாகும் என்பது அவர் கருத்து.

❋

## 8. மகளிர் நலம்

பரத்தையர்ப் பிரிவு முதலியனவற்றால் தமிழ் மக்கள் பல மகளிரோடு வாழ்க்கை நிகழ்த்தினவர்கள் என்றும், 'பின் முறையாக்கிய பெரும் பொருள் வதுவைத் தொன் முறை மனைவி' என்ற தொல்காப்பியத் தொடரால் பலதார மணம் உண்டென்றும் ஐயம் ஏதுமின்றி முடிவு செய்ய லாம். தமிழ் மக்களிற் பலரோ அல்லது சிலரோ அவ் வாறு வாழ்ந்திருக்கலாம். ஆனால் அதுதான் அவர்கள் கொள்கையென்றோ அப்படி வாழ்வதுதான் சிறந்தது என்று தமிழ் அறிஞர்கள் வற்புறுத்தினார்கள் என்றோ சொல்ல முடியுமா? தொல்காப்பியர் ஒரே மனைவியோடு தான் வாழ வேண்டும் என்றோ பலரோடு வாழ்வது கூடாது என்றோ வெளிப்படையாக ஏதும் கூறவில்லை. ஒருவனும் ஒருத்தியுமாக வாழும் வாழ்வையே சிறந்தது என்று தொல்காப்பியர் கூறியதாகக் கூறவேண்டும் என்று நச்சினார்க்கினியர் ஆசைப்படுகிறார். அவர் வெளிப்படை யாகக் கூறாதபோது உரைகாரர் இதனை எந்த நூற்பா வின்கண் எழுதுவது? சரியான இடம் ஒன்றை நச்சினார்க் கினியர் கண்டுபிடித்துக் கொண்டுவிடுகிறார்.

பொருளதிகாரத்துப் பொருளியலை அகப்பொருள் இலக் கணத்தின் வழுவமைதிகளைத் தொகுத்துக் கூறும் இய லாக நச்சினார்க்கினியர் கருதுகிறார். இளம்பூரணரோ பொதுவாகக் கூறும் ஒழிபியலே எனக் கொண்டனர். சேனாவரையர் சொல்லதிகார உரையில் கிளவியாக்கத்தை

வழுவமைதி கூறும் இயலாகக் காட்டினாற்போல இனியர் ஈண்டு பொருளியலைக் காட்டினர். பொருளியல் வழு வமைதி கூறுவதுதானா? அது வேறு கேள்வி. அவர் நம்புமாறுபோல நாமும் நம்பி மேற்சென்று காண்போம்.

'பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே' என்று தொடங்கும் நூற்பா பொருளியலில் அமைந்து கிடக்கி றது. இந்த அமைப்பு முறையைத் தன் கருத்தை வலி யுறுத்துவதற்குத் தக்க நிலைக்களனாகக் கொள்ளுகிறார். பரத்தமை பூண்டொழுகலும் தலைவன் பல மகளிர்க்குரிய னாதலும் பிழைபட்ட ஒழுக்கமாகும் என்றும் குற்ற மாயினும் ஒருவாறு மன்னித்து அமைகவெனத் தொல்காப் பியர் பெருந்தன்மை காட்டினார் என்றும் நச்சினார்க்கினியர் கூற நினைக்கிறார்.

> "ஒருவனும் ஒருத்தியுமாகி இன்பநுகர்ந்து
> இல்லறம் நிகழ்த்துதலே சிறந்ததென்றற்கு
> இங்ஙனம் பலராதல் வழுவென்று அதனை
> அமைத்தார்"
>
> — 30 - தொல் - பொருளியல்

என்பது அவர் உரையாகும்.

40ல் ஒன்று; 30ல் ஒன்று; 15ல் ஒன்று எனத் தலைவன் ஆண்டுவாரியாகப் பலப்பல மகளிரோடு நலம் பேணி இன்ப வாழ்வு மேற்கொள்கிறான். வண்டு போலக் களி மகனாகத் திரிகிறான்; 'தேர்தர வந்த தெரியிழை மகளிரொடு' கூடிக் குலவுகிறான். இவற்றையெல்லாம் இலக்கியத்தில் கண்டு காட்டும் நச்சினார்க்கினியர் தொல்காப்பியரின் அந்தரங்க உள்ளந்தான் என்ன என்று காண ஆசைப் படுகிறார்; தன்னைத்தானே கேட்டுக்கொள்ளுகிறார். தான் அமைத்துக்கொண்ட முறைப்படி தக்க இடத்தில்

விடையும் சொல்லிவைத்து விடுகிறார். அந்தக் காலத்து உரையாசிரியர்கள் உரையாசிரியர்களாக மட்டும் இல்லை. விமரிசகர்களாகவும் இருந்தார்கள் என்பதை மறக்கக் கூடாது.

களவியலில் உச்சாணிக் கொம்பிலே நின்றுகொண்டிருந்த தலைவி கற்பியலில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிற்கிறாள். தன் கடைப் பார்வைக்கு ஏங்கிக் கிடந்தவனின் வருகைக்காகக் கதவைப் பிடித்துக் கொண்டு நிற்கிறாள். களவியலில் அரியவளாகக் காட்சி அளித்தவள் கற்பியலில் மிக எளியவளாக விடப் பட்டிருக்கிறாள். ஆண்மை களவியலில் தாழ்கிறது; பெண்மையை உரிமை ஆக்கிக் கொண்டவுடன் கைப் பிடிக்கு எட்டாமல் உயர்ந்து விடுகிறது. கற்பியலில் ஓர் ஆண்மையைச் சுற்றிப் பல பெண்மைகள் சுழல்கின்றன; அல்லது இப்படிச் சொல்லலாம் – ஆண்மை பல பெண்மைகளை நோக்கித் திரிகிறது; அதனால் அமைதி குலைந்து போகிறது. எல்லாக் காலத்தும் மகிழ்ந்து கொண்டே இருக்கவேண்டும்; மகிழ்ச்சியே குறிக்கோள் என்று நினைக்கிறது ஆண்மை. சுற்றிச் சுழலும் பெண்மைகளோ ஏதோ குறிப்பிட்ட ஒவ்வோர் காலந் தவிர மகிழ முடியவில்லை. துன்பத்திலே உழல்கின்றன – இதுவே தொல்காப்பியர் காட்டும் பொருட்பாலின் திரண்ட பிண்டம்.

அப்படியானால் இதன் கருத்தென்ன? ஆண்மை-பெண்மை இரண்டும் எல்லாக் காலத்தும் மகிழ்ந்திருக்க வேண்டும் என்றால் மனிதன் என்ன செய்ய வேண்டும்? ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கைதானே வலியுற

வேண்டும். இதுநாள் வரையிலும் ஒருத்திக்கு ஒருவன் என்ற கொள்கையை வலியுறுத்தி வலியுறுத்தித்தானே உலகம் இப்படி ஏமாந்து போயிருக்கிறது. இந்த உண்மையைத் தொல்காப்பியம் முடிவாகத் தெரிவிப்ப தாகக் கொண்டால் தொல்காப்பியர் ஒருவனும் ஒருத்தி யுமாக இன்ப நுகர்தலையே வலியுறுத்தினர் என்பதை ஏற்றுக்கொள்ளுவதில் என்ன தடை?

❊

# 9. தலைமக்கள் சாதி

ஒரு பாடலை எடுத்துக்கொண்டால் நச்சினார்க்கினியர் சில சமயங்களில் **அதன்** தலைவன் எந்தச் சாதியைச் சேர்ந்தவன் என்றோ அல்லது அதன் தலைவி எந்தச் சாதியைச் சேர்ந்தவள் என்றோ கூறமுற்படுகிறார். சில வேளைகளில் தலைவியின் மேனி நிறம் என்னவாயிருக்கும் என்று கூடக் கூறுகிறார். அப்படிக் கூறும்படியாக அப்பாடல்களில் எதுவும் வெளிப்படையாக இல்லாதபோது சில சொற்களை வைத்துக்கொண்டே தம் முடிபை வெளிப்படுத்துகிறார்.

பாலைக் கலி 24ஆம் பாடலில் **நடுநின்று** என்பதனையும் **'கடிமனை காத்தோம்ப'** என்ற தொடரினையும் வைத்துக் கொண்டு அந்தணன் தூதிற் பிரிந்தான் என்று கூறினார். காத்து - ஓம்ப என்ற இரண்டு சொல்லும் ஏறக்குறைய காத்தல் என்ற ஒரே பொருளைத் தருவனவாம். இரண்டு சொற்களையும் ஒரு நீர்மைத்தாகக் கொண்டு இல்லறத்தைக் காத்தோம்ப என்று பொருள் செய்யலாம். இப்படிப் பொருள் கூறினால் அந்தணன் எனச் சாதிவரை செய்வதற்கு வழியில்லை. ஓம்ப என்ற சொல் அவருக்கு அந்தணர்கள் எரியோம்பும் வழக்கத்தை நினைவூட்டுகிறது. அந்தணர்கள் தீ யோம்பி வழிபடுவர். யாண்டும் அத்தீ இல்லத்தில் அவியாது ஒளிர்தல் வேண்டும். தாம் வீட்டை விட்டு அகல நேர்ந்தபோதும் அத்தீயைப் பேணிவருமாறு தக்கார் ஒருவரை நாட்டிச் செல்வர். தலைவியே அதனைப்

பேணினும் பேணிவருவாள். இந்தப் பாடலில் 'கடிமனை காத்தோம்ப' என்றிருக்கிறதேயன்றி செந்தீயைப்பற்றி யாதொரு செய்தியும் இல்லை. மனைகாத்துச் செந்தீயை ஓம்ப என்று வருவித்துக்கொண்டதும் பொருந்தாது?

தீயோம்புதல் அந்தணர்க்கு மட்டுமே உரியதா? அப் படியும் இல்லை. வேதவழக்கொடுபட்ட அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூன்று சாதியினர்க்கும் அது உண்டென்பது நச்சினார்க்கினியர்க்கும் உடன்பாடே. கடல் கடந்து செல்வதாகிய கலத்திற்பிரிவை மேற் சொன்ன மூன்று வருணத்தார்க்கும் இல்லை என்று விலக்கும் அவர் எரியோம்ப வேண்டுவது அவர் கடன் என்பதையே காரணமாகக் காட்டுகிறார். எனவே மூன்று வருணத்தார்க்கும் பொதுவானதொன்றை வைத்து அந்தணன் என்று கூறுவதும் ஒவ்வாது.

'ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன*' என்ற நூற் பாவிற்கு உரை யெழுதிய நச்சினார்க்கினியர் வேளாளர் ஒழிந்த மூன்று வருணத்தாரையும் உரியராகவே கூறிச் சென்றார். அவ்வாறு உரியராயின் அவர் கருத்துப்படியே தூதுபோதலை வைத்தும் அந்தணன் என்று கூறுமாறில்லை.

---

* இந்நூற்பாவிற்கு உரை எழுதுங்கால் வர்ணாஸ்ரமதர்மத்தை ஒட்டி உயர்ந்தோர் என்ற சொல்லுக்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பொருள் எழுதினர். நால்வரில் உயர்ந் தோர் அரசரும் அந்தணருமாகிய இருவரும் என இளம்பூரண ரும், வேளாளரை நீக்கி மற்ற மூவர் என இனியரும் உரைத் தனர். தகுதியாலும் சுதந்திரத்தாலும் உயர்ந்து பிறரேவலை எதிர்பார்த்து வாழாத பெருமக்கள் எனச் சோமசுந்தரபாரதியார் உரை எழுதிச் சென்றனர். பாரதியார் உரையே ஏற்றுக் கொள்ளத் தக்கதாம்.

'நடுநின்று' என்ற சொல்லை வைத்துக் கொண்டு தூதிற் பிரிந்தமை கூறினர். இருவேந்தரிடை நிகழ்ந்த போரை நிறுத்தி அவர்க்கிடை நின்று அமைதி செய்விக்க, அது காரணமாக இருவேந்தரும் அவனுக்குப் பூசனை செய்து பொருள் கொடுத்தனுப்பப் பிரிந்துவரும் அந்தணத் தலைமகனையே இங்கு நச்சினார்க்கினியர் காட்டுகிறார்.

''இருபெரு வேந்தரையும் சந்துசெய்வித்தற்கு நடுவாக நின்று சந்துசெய்வித்த பின்னர் யாம் பெறுதற்கு உரியவாய் அவர் எமக்குச் செய்யும் பூசனையாகிய பொருள் தந்து முடியுமளவும்'' என்பது அவர் உரையாகும்.

> "விடுமருப்பு யானை இலங்கு தேர்க்கு ஓடும்
> நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
> செய்பொருள் முற்றும் அளவு............" —(கலி - 24)

இக்கலித்தொகை வரிகட்கு மேற்கண்ட நச்சினார்க்கினியர் உரை பொருந்துவதாகுமா? அந்தணன் தூதிற் பிரிந்து பொருள் செய்வான் என்பதற்கு இதில் சான்றேதும் இல்லை. யானை கானல் நீருக்காக ஓடித் தவிக்கும் நெடிய மலைவழிகளைக் கடந்து நடுநிலைமையோடிருந்து பொருளீட்டி வருதலையே இங்கு கவிஞன் கருதியிருக்கின்றான். அறமல்லாத வழிகளில் பொருளீட்டி வருதலைத் தமிழுள்ளம் ஏற்காது. 'நடுநின்று செய்பொருள்' என்பதனை மீண்டும் மீண்டும் படித்தால் கவிஞனின் உள்ளம் இனிது புலப்படும். எவ்வளவோ இன்னல்கள் அடைந்தாலும், கடக்கவொண்ணாத வழிகளில் கடந்து சென்றாலும் பொருளீட்டும்போது மட்டும் நடுநிலைமை தவறாமல் நேர்மையாகப் பொருளீட்டி வரவேண்டும். இவ்வுயர்ந்த குறிக்கோளை நச்சினார்க்கினியர் கண்டும் காணாது செல்லுதல் வருந்தத்தக்கதாம்.

நச்சினார்க்கினியர் நினைக்கிறபடியே கொண்டாலும் இருபெரு வேந்தர்க்கிடையே அந்தணர்மட்டுமே நின்று சந்து செய்வார் என்பதில்லை. சங்க காலத்தே பல புலவர்கள் மாறுபட்ட அரசர்கள் இடைநின்று அமைதி உண்டாக்கியுள்ளனர். அந்தணர்க்கு மட்டுமே சந்து செய்தபோது அ ர ச ர் க ள் பொருள் கொடுப்பார்கள் என்பதோ மற்றவர்கட்குக் கொடார் என்பதோ நியதி யில்லை. எனவே இப்பாடலின் தலைவனை அந்தணனாக நச்சினார்க்கினியர் கூறல் பொருந்தாது.

*

## 10. வெட்டும் ஒட்டும்

முதல் வரியிலிருந்து மூன்றாவது வரி, மூன்றாவது வரியிலிருந்து முந்நூறாவது வரி என்று தாவித் தாவி உரை எழுதி மீண்டும் முந்நூறிலிருந்து இருநூறாவது வரியில் உள்ள இரண்டாவது சொல்லை எடுத்துக்கொண்டு உரை விளையாட்டு விளையாடும் நச்சினார்க்கினியரைப் பத்துப் பாட்டில் காண்கிறோம். ஆனால் அங்கேயாவது ஒரே பாட்டில் அவர் இந்தத் 'திருவிளையாடல்'களை நடத்துகிறார். ஆனால் சீவகசிந்தாமணியில் ஒரு பாட்டின் மூன்றாவது வரியோடு எட்டாவது பாட்டின் முதல் வரியை இணைத்துப் பொருள் சொல்லுகிறார். தமக்கு முன்னால் இருந்த உரையாசிரியர்கள் சொன்னவற்றையே தாமும் சொல்லி அலுத்துப்போகாமல் புதிதாகச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வமும், சிறந்த கருத்துக்களைக் கொண்டு வரவேண்டும் என்ற ஆசையுமே இதற்குக் காரணம் என்பது நமக்குத் தெரியாமலில்லை.

சில சமயங்களில் கனவிலும்கூட அனுமதிக்க முடியாத படி பெயரோடோ அல்லது வினையோடோ கூடித் தோன்றும் இடைச் சொற்களைப் பிரிக்கிறார். தாம் விரும்பும் சொற்களோடு கூட்டுகிறார்.

**அன்ன பிறவும் — தொல்காப்பியர் - (கற்பு—1)**
**அன்னவும் பிற — நச்சினார்க்கினியர்.**

பிறவும் என்பதில் உள்ள உம்மையைத் தூக்கி அன்ன என்ற சொல்லோடு இணைக்கக் காண்கிறோம். கலித் தொகையில்,

'பாடல்சால் சிறப்பில் சினையவும் சுனையவும்
நாடினர் கொயல் வேண்டா நயந்துதாம் கொடுப்பபோல்'
[ பாலை — 28 ]

என்று வரும் வரிகளில் சினையவும் சுனையவும் என்ற சொற்களில் உள்ள உம்மையைக் **கொயல்** என்பதனோடும் **நயந்து** என்பதனோடும் மாற்றிக் கூட்டுகிறார்.

'பாடல்சால் சிறப்பில் சினை சுனை
நாடினர் கொயலும் வேண்டா நயந்தும் தாம் கொடுப்ப
[போல்'

என்று வைத்துக்கொண்டு மீண்டும் சினை என்ற சொல்லைத் தூக்கி ஐந்தாம் வரியோடு இணைக்கிறார்.

இடைச் சொற்களும் சொற்கள்தாமே. மற்ற சொற்களை இடம்விட்டு இடம்பெயர்த்துக் கூட்டுவதுபோல இவற்றையும் கூட்டிக்கொள்ளக் கூடாதோ என வினவலாம். இடைச் சொற்கள் ஆயினும் தாமே தனித்து வர மாட்டா. பெயர்ச் சொல்லோடும் வினைச் சொல்லோடும் சார்ந்துவந்து பொருள் பெறுவதன்றித் தாமே தனித்து நடைபெறமாட்டா. இதனைச் செய்யலாம் என்று அனுமதித்தால் தமிழில் எதனைச் செய்யக்கூடாது? எங்கோ நிற்கும் வினைமுற்றின் விகுதியை எடுத்து வினை எச்சத்தோடு சேர்த்து நாம் நினைக்கும் கருத்துக்கேற்ப வினை முற்றாக்கிக் கொள்ளலாம்.

'கண்ணன் சாத்தனை அடித்தான்' என்ற தொடரில் 'ஐ'வேற்றுமை உருபைக் கண்ணன் என்பதனோடு இயைத்தால் 'கண்ணனைச் சாத்தன் அடித்தான்' என்று ஆகிவிடும் என்று ஒருவர் நச்சினார்க்கினியரைப் பின் பற்றிக் கூறுவதாகக் கூறினால் நாம் என்ன கூறமுடியும்?

எனவே நச்சிஞர்க்கினியர் செய்கிருரே என்பதற்காக அனுமதிக்க முடியாது.

ஒரு கவிஞன் தான் பாடும்போது முதல்வரியில் நின்ற சொல்லே மூன்ருவது வரியில் இணைக்கவேண்டும் என்ருே அவ்வாறு இணைத்தால்தான் பொருள்கிடைக்கும் என்ருே கருதியிருக்கமாட்டான். அப்படி ஆசிரியன் நினையாதிருக்க அவன் உள்ளத்திற்கு மாருக உரை காணுதல் தவறு என்பதில் ஐயமில்லை. மொழியியல்பை அது கெடுப்பதாகும். நச்சிஞர்க்கினியர் இதைப் பொறுத்த மட்டில் குறைபாடுடையவரே. மாட்டேற்றுப் பொருள் கோள் உண்டு எனத் தமிழாசிரியர்கள் ஒத்துக்கொண்டிருப்பினும் அதனை மிக அருகியே பயன்படுத்துதல் சாலும். 'மாட்டிஞல்தான் பாட்டு' என்று தொடங்கி விடக் கூடாது. ஆனுல் இந்தக் குறையில் அவருடைய அரிய திறமை மறைந்துபோய்விடாது. அது மறைக்க முடியாதபடி மலைபோல நிற்கிறது. இந்தப் பெருங் குறையைக்கூட இதுநாள் வரை அந்தப் பெருந் திறமை தான் மறைத்து வந்திருக்கிறது. அவரைத் தள்ளிவிட முடியாதபடி வைத்திருக்கிறது. அவருடைய காலத்தில் தமிழைப் பொறுத்தமட்டில் அவர் ஒரு சர்வாதிகாரியைப் போலவே விளங்கியிருப்பார். இங்கிலாந்து நாட்டில் ஜான்ஸன் காலத்தில் ஜான்ஸன் ஆங்கில மொழியின் சர்வாதிகாரியைப் போல விளங்கிஞர் என்று கேள்விப் பட்டிருக்கிருேம். இங்கு நாம் நச்சிஞர்க்கினியரை அப்படி நினைத்துக்கொள்ளலாம். பாட்டின் சொல்லமைப்பை அவர் எப்படிச் சிதைத்தாலும் பண்டிதர் பரம்பரை வழிவழியாக அவரைப் போற்றிவந்திருக்கின்றமையும் நினைக்கத்தக்கது.

*

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 105784

## 11. நாவலர் நோக்கும் நச்சினார்க்கினியரும்.

"தொல்காப்பியர் நூலுள் 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின் அகத்தவர் வழங்கும் தமிழ்ப் பழ மரபுகளே' கூறப்பெறுகின்றன என்பதனை மறக்கொணாது. இவ்வுண்மை மறந்து உரைகாரர் பிறவடநூற் கொள்கைகளை இத்தமிழ்நூல் கூறுவதாகக் கொண்டதனால் பல சூத்திரங்களுக்குத் தொல்காப்பியர் நோக்குக்கும் அவர் சூத்திரச் சொற்போக்குக்கும் பொருந்தாப் பொருள் கூறி இடர்ப்படலாயினர்."

[தொல்காப்பியர் பொருட்படலம்.
புறத்திணையியல் முன்னுரை-பக்கம் 11.]

இவ்வாறு பேராசிரியர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் எழுதியிருப்பதைக் காணலாம். தொல்காப்பியரின் அரிய நூலில் காணப்படும் தமிழர் பண்பாட்டினை உரையாசிரியர்கள் அறிந்துகொள்ளாமல் வடநூல் கருத்துக்களை வலிந்து புகுத்தி மாசுபடுத்திவிட்டார்கள். தமிழ்த் தொல்காப்பியரை உரையாசிரியர்கள் மறைத்து விட்டனர் என்பதே பாரதியார் அவர்களின் கருத்தாகும்.

நச்சினார்க்கினியர் தமிழ்மொழி வேறு வடமொழி வேறு என்று அறிந்தவர்; இரண்டும் ஒன்றற்கு ஒன்று தாழ்ந்தன ஆகமாட்டா என்பதை உணர்ந்தவர். ஆனால் தமிழ் நாகரிகம் வேறு வேத நாகரிகம் வேறு என்பதை அறியாதவர். இரண்டும் காலப் போக்கில் பின்னிப் பிணைந்து கொண்டிருக்கின்றன என்ற உண்மை அவருக்குத் தெரிந்

திருக்க வேண்டும் என்பதற்கில்லை. எல்லா நாகரிகமும் வேதவழிவந்த நாகரிகங்களே என்று நம்பினுர். இல்லாத அகத்தியமும் கிடைத்துள்ள தொல்காப்பியமும் வேதவழி வந்த நூல்களே என்றும் அவை வேதம் ஆய்ந்த பொருளையே ஆய்வதாகவும் அவர் கருதினுர் *. இரண்டு நாகரிகத்தையும் ஒன்றெனை எண்ணிவிட்ட மயக்கத்தால் அவர் உரைக்கண் பல இடர்ப்பாடுகள் தோன்றின.

'கரணத்தின் அமைந்து முடிந்த காலை' [தொல் — கற்பு — 5] என்ற தொடருக்கு ''ஆசான் புணர்த்த கரணத்திஞலே வதுவை முடிந்த பின்பு'' என இளம் பூரணர் உரை எழுதினுர். எது முடிந்த காலை என வினவிஞல் திருமணம் முடிந்த காலை எனவரும் விடையே முன்னும் பின்னும் நோக்கப் பொருந்தியுள்ளது. திருமணம் முடிந்தபின் தலைவன் எவ்வெவ்வாறு பேசு வான் என்பதை அந்நூற்பா கூறுகிறது. இந் நூற்பா விற்கு நச்சிஞர்க்கினியர் உரை எழுதும்போது உரை யாசிரியரோடு மாறுபட்டு உரை வகுத்தார். இதுபோன்ற சில மாறுபாடுகளைக் காணும்போதுதான் உரையாசிரியர் எத்துணை உயர்ந்தவர் என்பது விளங்கும். மிகமிகப்

---

* உயர்ந்தோர்க்குரிய ஓத்திஞன் [தொல் - அகம் - 31] என்ற நூற்பா உரையில்,

"வேதத்திஞல் பிறந்த வட நூல்களும் தமிழ்நூல்களும்" என்று கூறி, ''அவை சமய நூல்களும் ஒன்றற்கொன்று மாறு பாடு கூறும் தருக்க நூல்களும், தருமநூல்களும், சோதிடமும், வியாகரணம் முதலியனவும், அகத்தியம் முதலாகத் தோன் றிய தமிழ்நூல்களுமாம். வேதந்தோன்றிய பின்னர் அது கூறிய பொருளை இவையும் ஆராய்தலின் ஓத்திஞன என்று அவற்றிற்குப் பெயர் கூறிஞர். ஓத்தென்பது வேதத்தை ஆதலின்'' என விளக்கம் எழுதிஞர். [ஓத்து = வேதம்; ஓத்தின் ஆன = வேதத்திஞல் ஆன நூல்கள்.]

படித்தவர்களைக் காட்டிலும் குறும்பு செய்யாதவர்களே நமக்கு வேண்டும் என்ற முடிவுக்கு வருவோம்.

முடிந்த காலை என்பதற்கு நான்காம் நாளின் பக லெல்லை முடிந்த பின்னர் என்பது நச்சினார்க்கினியர் உரை. இந்த நான்காம் நாள் எங்கிருந்து வந்தது? என்ன ஐயா அந்த நான்காம் நாள் என்று கேட்டால் தமிழ் உள்ளத் திற்கு ஒவ்வாத கருத்தொன்றை வேதம் சொல்வதாக எடுத்தியம்புகிறார் நச்சினார்க்கினியர். திருமணப் பெண் முதல்நாள் சந்திரனுக்கும், இரண்டாம்நாள் கந்தருவர்க் கும், மூன்றும் நாள் தீக் கடவுட்கும் மனைவியாக இருந்து தீக்கடவுள் கொடுக்க நான்காம் நாள் தன் கணவனுக்கு மனைவி ஆவாள். எழுத நாணும் இக்கருத்தை "அல்லல் தீர ஆர்வமொடு அளைஇ" என்ற இடத்திலும் வலியுறுத் திப் பேசுகிறார் *. அடிக்கடி சான்றோர் செய்யுட்களில் உதாரணம் காட்டிப் பேசுகிறவர், பிறரை மறுக்கும்போது சான்றோர் செய்யுட்களில் இன்று என்று கூறுகிறவர் தம் கருத்திற்கு எடுத்துக்காட்டு நல்கிச் சென்றிருக்க வேண்டும். உதாரணம் இருந்து மறைந்துவிட்டதுபோல் உதாரணம் இக்காலத்தில் இல்லை என்று கூறுகிறார். அவர் காலத்தில் வழங்கிய கருத்துக்களை சரியா தவறா என்று

---

* தொல் - கற்பு - 5

.. "மூன்று இரவின் முயக்கம் இன்றி ஆன்றோர்க்கு அமைந்த வகையாற் பள்ளி செய்து ஒழுகி நான்காம் பகலெல்லை முடிந்த காலத்து."

ஆன்றோராவார் மதியும் கந்தருவரும் அங்கியும்.

அது முதனாள் தண்கதிர்ச் செல்வர்க்கும், இடைநாள் கந்தரு வர்க்கும், பின்னாள் அங்கியங் கடவுட்கும் அளித்து நான்காம் நாள் அங்கியங்கடவுள் எனக்கு நின்னை அளிப்ப யான் நுகர வேண்டிற்று, அங்ஙனம் வேதம் கூறுதலால் எனத் தலைவிக்கு விளங்கக்கூறுதல். உதாரணம் இக்காலத்தினின்று.

ஆராயாமலேயே, சூத்திரத் தொடரில் எந்தவிதமான குறிப்பும் இடமும் இல்லாதபோது வலியப் புகுத்திவிட்டார். அவர் காலத்து எல்லா நடவடிக்கைகளும், நினைப்பும் தொல்காப்பியத்தில் இருக்கின்றன என்று சொல்வதற்கு முனைந்த முனைப்பே இக் கேட்டை விளைவித்து விட்டது.

நச்சினார்க்கினியர் பிற சமயங்களை வெறுத்துப் பேசாதவராயினும் வேத வைதிகப் பற்று மிக்கவர். ஆனால் வேண்டாத இடங்களிலெல்லாம் 'வேதம் வேதம்' என்று கூறிக் கொண்டே இருப்பதால் அவரது வேதப் பற்றைக்கண்டு நாம் சலிப்படைகிறோம்.

**கட்டமை ஒழுக்கம்** = வேதம் முதலியவற்றால் கட்டுதலமைந்த ஒழுக்கம். [தொல்—புறம்—21]

**ஏவல் மரபின் ஏனோரும்** = வேத நூலுட் கூறிய இலக்கணத் தானே பிறரை ஏவிக்கொள்ளும் தொழில் தமக்குளதாகிய தன்மையை உடைய அந்தணர், அரசர், வணிகரும். [தொல்—அகம்—27]

**வேண்டிய கல்வி** = துறவறத்தினைக் கூறும் வேதாந்தம் முதலிய கல்வி. [தொல்—கற்பு—47]

இஃது உலகியல் எனப்படும்; உலகத்து மன்றலாவது குரவர் கொடுப்பதற்கு முன்னர் ஒருவர்க்கும் ஒருத்திக்கும் கண்ணும் மனமும் தம்முள் இயைவதே என வேதமும் கூறிற்றாதலின். — [தொல் - களவு - 1]

இது வேதத்திற் கரணம் ஒழிய ஆரிடமாகிய கரணம் பிறந்தவாறும் அதற்குக் காரணமும் கூறுகின்றது.

— [தொல் - கற்பு - 4]

இப்படிப்பட்ட பல இடங்கள் உண்டு. நான் சிலவற்றைமட்டும் ஈண்டு காட்டியுள்ளேன். இருக்கு, யசுர், சாம முதலிய மூன்று வேதங்களைத் தலையாய நூல்களாகக் கொள்கிறார். அவர் போற்றிக் கையாளும்

தொல்காப்பியம் கூட இடையாய நூலாக அவருக்குத் தோன்றுகிறது.

'தோழி, தாயே, பார்ப்பான்' என்ற நூற்பாவிற்கு உரை எழுதுங்கால்,

**பார்ப்பான் = அவரின் ஆற்றலுடைய பார்ப்பானும்**
**பாங்கன் = அவரே போலும் பாங்கனும்**

என எழுதிச் சென்றனர். தலைவன் தலைவி ஆகிய இருவரினும் அறிவு ஆற்றலுடையவன் பார்ப்பனப் பாங்கன்; பார்ப்பனனல்லாத பாங்கனோ அறிவாற்றல்களில் தலைவன் தலைவியர்க்கு நிகராவானேயன்றி மிக்கோனாகமாட்டான். இங்கே நச்சினார்க்கினியர் பிராமணர் என்பதை நினைவு படுத்திக்கொள்ள வேண்டிய நிலை வருகிறது.

'அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்' என்ற தொடருக்கு உரை எழுதுங்கால், 'வேட்பித்த ஆசிரியனும் கற்பித்த ஆசிரியனுமாகிய பார்ப்பார்கண்ணும்' என எழுதிச் சென்றார். பல உயர்ந்த உபநிஷத்துக்களைச் செய்தவர்களும், பல தத்துவ விளக்கங்கள் செய்தவர்களும் பார்ப்பனரல்லாத ஆசிரியன்மார்களே என்பதை நச்சினார்க்கினியர் உணராது போயினர்.

ஒரு குலத்திற் கொருநீதி கூறும் மனுநீதி தர்ம சாஸ்திரம், கௌதமர் தர்ம சூத்திரம், கௌடில்யர் அர்த்த சாஸ்திரம் போன்ற வடநூற்களின் கருத்துக்கள் இவர் உரைக்கண் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன.

புறத்திணையியல் 75ம் நூற்பா உரையில்,

"இனிப் பார்ப்பனப் பக்கத்து வகையாவன பார்ப்பார்க்குப் பார்ப்பனக் கன்னியிடத்துக் கற்பு நிகழ்வதற்கு முன்னே களவில் தோன்றினும், அவள் பிறர்க்குரியளாகிய காலத்துக் களவில் தோன்றினும், அவள்

கணவனை இழந்திருந்துழித் தோன்றினனும், ஒழிந்த மூவகை வருணத்துப் பெண்பாற் கண்ணும் இவ்வாறே தோன்றினரும், அவரவர் மக்கட்கண் அவ்வாறே பிறழத் தோன்றினருமாகிய சாதிகளாம்'' என்று எழுதினர். பார்ப்பனர்கள் எவ்வளவு ஒழுக்கக் கேடாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைத்தானே இந்த வரிகள் பறைசாற்றுகின்றன. வாழ்ந்ததுகூட வியப்பில்லை. அதை அறத்தின் பேரால் ஒத்துக்கொள்ள வைத்திருக்கிறார்களே அது தான் விந்தை.

அரசர் பக்கத்துக்கு விளக்கம் எழுதுங்கால், ''தமரும் அந்தணரும் இல்வழிப் பிறன் தாயங்கோடலும்'' எனக் குறித்தனர். அதுவும் ஈண்டு காணத்தக்கதே. செவிலிக்குரிய கூற்றுக்களைத் தொகுத்துக் கூறும்,

> ''நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்
> செவிலிக் குரிய ஆகும் என்ப''
>
> — தொல் - கற்பு - 12

என்ற நூற்பாவிற்கு உரை காணுங்கால் நல்லவை உரைத்தல் என்ற தொடருக்கு,

> ''மூன்று காலத்தும் தத்தம் குலத்திற்கு ஏற்கும்படி
> முற்கூறிய கற்பு முதலிய நல்லவற்றைக் கற்பித்தலும்''

என எழுதிச் சென்றனர். கற்பு குலத்திற் கேற்பவா மாறுபடும்; குலத்திற் கேற்பவா கற்பிக்கப்படும். குலத்திற்கேற்ப ஒழுக்கம் முதலாயின மாறுபடும் என்ற தப்பான வர்ணாஸ்ரம தர்மக் கொள்கை இவரிடம் படிந்திருப்பதைக் காணலாம்.

> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
> மிக்கோ னாயினும் கடிவரை யின்றே
>
> — தொல் - களவு - 2

என்ற தொடர்களை நச்சினார்க்கினியர் வர்ணாஸ்ரமக் கண்களோடும் வருணத்திற்கேற்ப நீதிகளை மாற்றி மாற்றிக் கூறும் வடநூல் கருத்துக்களோடும் அணுகுகிறார்.

"மிகுதலாவது குலம் கல்வி பிராயம் முதலியவற்றான் மிகுதல். எனவே அந்தணர் அரசர் முதலிய வருணத்துப் பெண் கோடற்கண் உயர்தலும், அரசர் முதலியோர் அம்முறை உயர்தலும் கொள்க. இதனானே அந்தணர் முதலியோர் அங்ஙனம் பெண் கோடற்கண் பிறந்தோர்க்கும் இவ்வொழுக்கம் உரித்தென்று கொள்க. அவர் அங்ஙனம் கோடற்கண் ஒத்த மகளிர் பெற்ற புதல்வரோடு ஒழிந்த மகளிர் பெற்ற புதல்வர் ஒவ்வார் என்பதும் உணர்த்தற்குப் பெரிதும் வரையப்படாதென்றார். பதினாறு தொடங்கி இருபத்து நான்கு ஈறாகக் கிடந்த யாண்டொன்பதும் ஒரு பெண் கோடற்கு மூன்றியாண்டாக அந்தணன் உயருங் கந்தருவமணத்து; ஒழிந்தோராயின் அத்துணை உயரார். இருபத்து நான்கு இரட்டி நாற்பத்தெட்டாதல் பிரம முதலியவற்றான் உணர்க. வல்லெழுத்து மிகுதல் என்றாற்போல மிகுதலைக் கொள்ளவே பிராயம் இரட்டியாயிற்று."

இது நச்சினார்க்கினியர் விளக்கவுரையாகும். அந்தணன் தன் குலத்திலும் மற்ற மூன்று சாதிகளிலும் பெண் கொள்வான்; அரசன் தன் குலத்திலும் மற்ற இரண்டு சாதிகளிலும் பெண் கொள்வான். சுருங்கச் சொன்னால் பார்ப்பனப் பெண்ணை மற்ற மூன்று சாதியினரும் கொள்ளக்கூடாது என்பதே இதன் முடிந்த கருத்து. காதல் தத்துவத்தைத் தனித் தெம்போடு வாங்கிப் புரிந்துகொள்ள இங்கு நச்சினார்க்கினியரால் முடியவில்லை. ஒப்பு-மிகுதி என்பனவற்றை விளக்கக் குலம் முதலியவற்றை இழுத்துப் பின்னியிருக்க வேண்டாம். ஒப்பு முதலியவற்றை நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது எழுதியும்

உரைத்தும் இன்ன என்று காட்டலாகாப் பொருள் என உரைத்த தொல்காப்பியனின் திருவுள்ளம் நினைத்து நினைத்துப் போற்றத் தக்கதாகும். அதனை அறிந்து அணுகித் தெளிந்துகொள்ள முடியாமல் நச்சிஞர்க்கினியர் தடுமாறுகிருர். இவ்வாறு குலத்தால் மிகுதி காட்டியவர் அதனோடமையாது ஆண்டிஞல் மிகுதியும் காட்டலாயினர். அதுவும் பார்ப்பனர்க்கே உரியதெனக் கூறினர். ஆண்டிஞல் மிகுதியை நச்சிஞர்க்கினியர் கூறுமாறு கீழ்க்கண்ட பட்டியலால் விளக்கலாம்.

| எண். | மணப் பெண்ணின் குலம். | | மணப்பெண் வயது. | | பார்ப்பன மணமகனின் வயது. |
|---|---|---|---|---|---|
| 1. | அந்தணப் பெண் | — | 12 | — | 16 |
| 2. | அரசர் குலப் பெண் | — | 12 | — | 18 |
| 3. | வணிகர் குலப் பெண் | — | 12 | — | 21 |
| 4. | சூத்திரப் பெண் | — | 12 | — | 24 |

இது கந்தருவ மணத்தில் அதாவது நச்சிஞர்க்கினியர் நினைக்கும் தமிழ்க் களவியல் மணத்தில் பார்ப்பனக் காதலன் - காதலியரின் ஆண்டு வரையறையாகும். இரண்டு மடங்கு மூத்த அந்தணன் பன்னிரண்டு வயது சூத்திரப் பெண்ணைக் காதலிக்கலாம். ஆனல் மற்ற குலத்தினர் வயதிஞன் பதிஞறுக்குமேல் மிகுவதை நச்சிஞர்க்கினியர் அனுமதிக்கவில்லை. காதல் தத்துவத்திற்கு முரணுக மற்ற குலத்தாராவது செல்லாமலிருக்கட்டும் என்று நினைத்தாரோ என்னவோ. இன்னும் பார்த்தால் பிரமசரியம் காத்த அந்தணனே நாற்பத்தியெட்டாண்டு சென்றபின் பன்னிரண்டு ஆண்டு சென்ற

பெண்ணை மணந்துகொள்வான். ஒற்று இரட்டிப்பது போல் இருபத்தி நான்கு நாற்பத்தியெட்டாகும் என்று கூறுகிறார். இதுபோன்ற உரைகளை யெல்லாம் தொல்காப்பியர் காண நேர்ந்தால் எத்துணை நொந்துபோவார். இவற்றையெல்லாம் படித்துவிட்டு இத்துணை காலம் தமிழுள்ளம் மரக்கட்டையாகவே இருந்துவந்திருப்பது தான் வியப்பாகும்.

நச்சினார்க்கினியரைக் குறை கூறிப் பயன் இல்லை. வழிவழியாக இந்த நாட்டில் இதுபோன்ற கருத்துக்கள் நீதியின் பேரால் பரவிவிட்டன; மக்கள் அவற்றோடு பழகிப் பழகி அவை தீய கருத்துக்கள் என்பதனையே மறந்துவிட்டார்கள். பெருந்தன்மையால் அறிஞர்களின் உள்ளம் அவற்றை எதிர்த்துச் சிந்திக்கவே மறுக்கின்றன.

நச்சினார்க்கினியரைத் தொல்காப்பிய உரையாசிரியராக வைத்துக் காணுவதைக் காட்டிலும் இலக்கிய உரை யாசிரியராகக் கொண்டு போற்றுவதே சிறப்புடைத்தாம்.

நாடு கடந்து, மொழி கடந்து, திணை கடந்து காதல் தத்துவம் பொதுவாக நின்று பேரொளி வீசுகிறது. அதன் திருமுன்னிலையில் அந்தப் பேரரசில் எல்லா உயிரும் ஒரு நிகராக நிற்கின்றன. 'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்' என உரைத்த தொல் காப்பியர் திருவுள்ளமும் அதனைத்தானே வலியுறுத்து கிறது. இத்தகைய அகப் பொருளையும், மற்று புறப் பொருளையும் விரித்துரைக்கும் பொருளதிகாரத்தை அதன் செவ்வி உணராது உரைகாரர்கள் மறைத்துவிட்டார்கள். தமிழ் மரபு பிழையாமல் உலக ரீதியில் தொல்காப்பியருக்கு விளக்க நூல்கள் பல வெளிவர வேண்டும். தொல்காப் பியர் ஆராய்ச்சியே தமிழ்நாட்டில் இனித்தான் தொடங்க

வேண்டும், அதனை ஓரளவு அறை குறையாகவேனும் தொடங்கி வைத்த நாவலர் பாரதியார் அவர்களை நாம் மறப்பதற்கில்லை.

பாரதியார் காட்டும் கோணத்தில் நின்றுகொண்டு நச்சினார்க்கினியரிடம் காணப்படும் ஒன்றிரண்டு குறைகளைக் காட்டினேன். அதனால் நச்சினார்க்கினியரை முழுக்க முழுக்கத் தள்ளிவிடவேண்டும் என்று தொடங்குவது அறிவுலகிற்கு ஒவ்வாத செயலாகும். நச்சினார்க்கினியர் கூறும் எல்லாவற்றையும் 'நன்று நன்று' என அப்படியே வாங்கிக்கொள்ளும் சிந்தனையற்ற வறட்டுக் கும்பலையும் நான் சேர்ந்தவனல்லன். அவர் கருத்துக்கள் அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள நான் என்ன மொத்த வியாபாரியா? அதற்காக நச்சினார்க்கினியர் தமிழைக் கெடுத்துவிட்டார் என்ற ஒரே பல்லவியைத் திருப்பித் திருப்பிப் பாடும் 'உதவாக்கரைக் கூட்டத்'தைச் சேர்ந்தவனும் நான் அல்லன்.

*

## 12. மக்கள் - புதல்வர்

மக்கள் என்ற பொதுச் சொல்லுக்குப் புதல்வர் என்று பொருள் கூறியதன் மூலமும் புதல்வற் பேறு என்று தலைப்பிட்டதன் மூலமும் பெண்கள் குலத்தைத் தாழ்த்தி விட்டதாகப் பரிமேலழகரைப் பலர் குறை கூறுவர்*. அதுபற்றிப் பரிமேலழகர் குறையுடையவர் எனின் நச்சினார்க்கினியரும் அக்குறைபாடுடையவரே. தொல்காப்பியரைப் பின்பற்றி வரும் தமிழ் மரபும் குறைபாடுடையதே.

*மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்*
**கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்** — தொல் - கற்பு 5.

இந்நூற்பாவின்கண் மக்கள் என்ற சொல்லுக்குப் புதல்வர் என்றே நச்சினார்க்கினியர் உரை கூறுகிறார். பிரிந்து சென்ற தலைமகன் திரும்பிவரும்போது மாலை ஏந்திய பெண்டிரும், பிள்ளைகளும், சுற்றத்தாரும் ஆவலோடு எதிர்கொள்வர். அப்பொழுது தலைவன் கூற்று நிகழ்த்துவான். பிரிந்து திரும்பி வருபவனை ஆண் குழந்தைகள் மட்டும்தான் நின்று வரவேற்க வேண்டுமா? பெண்குழந்தைகளும் வரவேற்கக்கூடாதோ எனக் கேட்கலாம். நச்சினார்க்கினியர் புதல்வர்களைத்தான் இவ்விடத்தில் வரவேற்க அனுப்புகிறார். பெண்குழந்தைகள் கூடாதென்றோ பெண் பிறப்பு இழிவானதென்றோ அவர் நினைப்பவரல்லர்.

* 'அறிவறிந்த மக்கள்' — பரிமேலழகர் உரை.

பெண்மக்களைப் பெறுதல் தாழ்ந்தது என்று பொதுவாகத் தமிழர்கள் கருதவில்லை. அதனால் இழிவுபடுத்தவில்லை. ஆனால் மக்கட் பேற்றுள் புதல்வர் பேறு உயர்ந்தது என்பதனையும் அவர்களால் சொல்லாமலிருக்க முடியவில்லை. சொன்னார்கள், மகிழ்ந்தார்கள். அகப் பாடல்களுள் குழந்தைகளைப் பற்றிக் குறிப்பு வரும் இடங்களையெல்லாம் பார்த்தால் புதல்வர்களைத்தானே கவிஞர்கள் குறித்திருக்கிறார்கள். 'ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே' என்று கூறிய தாய்கூடப் புதல்வனைப் பெறுதலைத்தானே கூறியிருக்கிறாள்? புதல்வற் பயந்த திதலைவயிற்று முதுபெண்டிரே மணமக்களை வாழ்த்தினர். இலக்கண ஆசிரியர்கள்கூட 'மைந்தன் பிறந்தான், அதனால் தந்தை உவக்கும்' என்றுதானே எடுத்துக்காட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

*"புதல்வற்பயந்த புனிறுதீர் பொழுதின்"*

— தொல் - கற்பு.

*"தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை*
*மாயப்பரத்தை உள்ளிய வழியும்"*

— தொல் - கற்பு.

*"பல்வேறு புதல்வர்க் கண்டு நனி உவப்பினும்"*

*"மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்"*

எனவரும் இடங்களிலெல்லாம் புதல்வனையே கூறவேண்டும் என்ற கடப்பாடு இல்லை. பொதுவாகக் குழந்தைகள் சொல்லப்பட்டால் அகப்பொருள் இலக்கணம் குறைவுபடும் என்றும் சொல்லுதற்கில்லை. அப்படியிருந்தும் தொல்காப்பியர் புதல்வர் என்றே கூறியிருக்கக் காண்கிறோம். எனவே தொல்காப்பியரே புதல்வற் பேறு சிறந்ததாகக் கருதுதலை அறியலாம். எனவே நச்சினார்க்

கினியரை மட்டுமோ பரிமேலழகரை மட்டுமோ முழுமை யும் பொறுப்பாளிகளாகக் கூறக்கூடாது.

கணவனுக்குத் தொண்டு செய்து அவன் ஏவல் கேட்டு வாழவேண்டியவளே மனைவி என்று நச்சினர்க்கினியர் நினைப்பதை அவர் உரைகளில் அறியலாம். அதை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. மனைவிக்கும் பணிப் பெண் ணிற்கும் பெரிய வேறுபாடு உண்டு. 'குற்றேவல் நிலைய ளாகிய பெண்' என்று அவர் தொல்காப்பியம் பொரு ளியலில் கூறிச் செல்வதை நாம் ஏற்றுக்கொண்டால் அது பண்பாட்டின் இழுக்கினையே காட்டும். இக் குறை பாடு நம்முடைய முன்னோரிடத்தில் மட்டுமின்றி இவ் வுலகத்துப் பல பகுதியிலும் காணப்பட்டதே என்பதை நினைக்கும்போது அக்குறை பெரியதொன்ருகத் தோன்ற வில்லை.

❋

## நச்சினார்க்கினியர் கண்ட காமமும் துறவும்.

நச்சினார்க்கினியர் தம் உரையில் அடிக்கடி துறவு வாழ்க்கையை வலியுறுத்திப் பேசுவதை உணரலாம், கற்பின்றிக் களவு அமையாதவாறு போலத் துறவின்றி இல்லறம் அமையாது என்று கருதுகிறார் [1]. செவ்விய முறையில் இல்லறம் செய்து முதுமை வாராமுன்னர் துறவறத்தை மேற்கொள்ளவேண்டும். தலைவன் மட்டும் துறவியாகச் செல்வான் என்பதில்லை. தலைவன் தலைவி ஆகிய இருவருமே துறவைக் கைக்கொள்வர். இல்லறத்தில் துணையாக நின்றவள் துறவறத்திற்கும் துணையாக வருகிறாள். கிருஹ நிலையினின்று வானப்பிரத்த நிலையோடு அவள் துணை நின்றுவிடும். சந்நியாச நிலையில் தலைவியின் துணையுமற்றுத் தலைவன் தனியனாகிவிடுகிறான். உடலின்பத்திற்குத் துணையாக நின்றவள் உயிரின்பத்திற்கும் துணையாக வருகிறாளே அன்றித் தடையாகவில்லை என்பதே நச்சினார்க்கினியர் கருத்து. நம்பி அகப்பொருள்

1 தொல் - கற்பு - உரை:

"இவ்வீடு பேற்றினை இன்றியமையாது இல்லறம் என்பது இதன் பயன்."

தொல் - கற்பு - 47 உரை:

"இஃது இல்லறம் நிகழ்த்தினர் துறவறம் நிகழ்த்தும் கருத்தினராகலின் காலவரையறை கூறுராயினர்."

தொல் - களவு - 1 உரை:

"கந்தர்வர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும் ஈண்டு கற்பின்றிக் களவே அமையாதென்றற்குத் துறையமை என்றார்."

காரர் கருத்தும் அதுவேயாம். மற்றொன்று இங்கே கருத்தூன்றுதற்குரியது. துறவுக்காலத்துத் தலைவனோடு தலைவியை மட்டும் துணையாக நச்சினார்க்கினியர் அனுப்ப வில்லை. அவர்கள் காதல் வாழ்வில் எவரெவர் துணை நின்றாரோ அவர்களையும் ஒரு கூட்டமாகக் கூட்டிக் காட்டுக்கு அனுப்பிவிடுகிறார். அவர்கள் கூட அவன் துறவுக்குத் தடையாகாமல் அதனோடு இணைந்துவிடுகி றார்கள் என்று கூறவேண்டும் என்று அவர் நினைக்கிறார்[2]. நேரடியான சூத்திரப்பொருள் தம் கருத்திற்கு இடம் தராவிட்டாலும் தம் கருத்தை அவர் விட்டுவிடத் துணிய வில்லை.

> **தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
> **பாணன் பாடினி இளையோர் விருந்தினர்**
> **கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
> **யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப.**
>
> — கற்பியல் - 52.

இந் நூற்பா வாயில்கள் ஆவார் இவர் என்றும் அவர் இத்துணையர் என்றும் கூறுகிறது. தோழி முதலாகக் கண்டோர் வரை பன்னிருவர் வாயில்களாவார் என்று தொகுத்துரைப்பதாகவே இளம்பூரண அடிகளும் கருதி னர். தலைவன் துறவிற்கு இடையூறாகாமல் அவர் தாமும் துறப்பர் என்ற கருத்தைத் தரும் நூற்பாவாக இது காணப்படவில்லை. இளம்பூரணர் கருத்தை நச்சினார்க் கினியர் ஏற்றுக்கொள்ளாமல் தாம் புதிய உரை கொண்டதன் காரணத்தையும் தம் உரைக்கண் எழுதிப் போந்தார். வாயில்கள் இத்துணையர் என்று மட்டும்

---

**2** தொல் - கற்பு - 52 - உரை:
"இவர் அத்துறவிற்கு இடையூறாகாது முன் செல்வர் தாமும் அவரைப் பிரிவாற்றாமையின் என்பதாம்".

தொல்காப்பியர் உணர்த்த எண்ணியிருந்தால் வாயில்கள் இன்னின்னவாறு பேசுவர் என்று கூற்றுக்களைத் தொகுத்துக் கூறும் கற்பியல் 11-ம் நூற்பாவினை அடுத்து இதனை வைத்திருக்க வேண்டும். அவ்வாறு தொல்காப்பியர் கூருமையே நச்சிஞர்க்கினியர் தம் கருத்தை உறுதி செய்வதற்குத் தக்கதொரு நிலைக்களனுகும் என்று கொள்ளுகிருர் 3. மேலும் கற்பியலின் 51ம் நூற்பா என்ன உரைக்கின்றதோ அதனைத் தொடர்ந்தே மேற்படி 52-ம் நூற்பாவும் உரைக்கிறது என்று அவர் கருதுகிருர். அவர் அவ்வாறு கருதுதற்குரிய காரணத்தையும் ஈண்டு காண்போம்.

> காமஞ் சான்ற கடைக் கோட் காலை
> ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.
>
> — தொல் - கற்பு - 51.

இந்நூற்பா முதலிய பொருள் கூற வந்த நச்சிஞர்க்கினியர்,

> "இது முன்னர் இல்லறம் நிகழ்த்திய தலைவனும் தலைவியும் பின்னர் துறவறம் நிகழ்த்தி வீடு பெறுப என்கின்றது"

என எழுதினர். இந் நூற்பாவில் 'துறவறம்' என்று கொள்வதற்கு நேரடியாகச் சொல் ஏதும் இல்லை. அவர் இவ்வாறு உரை கூறுவதற்குச் **சிறந்தது பயிற்றல்**

---

3 "இதனைக் கற்பும் காமமும் (தொல் - கற்பு - 11) என்னும் சூத்திரத்து முன்னுக வாயில்களைத் தொகுத்துக் கூறிய சூத்திரமாக வைத்தல் பொருத்தமுடைத்தேனும் யாத்த சிறப்பின் என்று துறவு நோக்குதலின் இதன் பின் வைத்தார். இதற்குக் கோப்பெருஞ் சோழன் துறந்துழிப் பிசிராந்தையாரும், பொத்தியாரும் போல்வார் துறந்தார் என்று கூறும் புறச் செய்யுட்கள் உதாரணம்."

— தொல் - கற்பு - 52 - உரை.

என்னும் தொடரே ஆதாரமாக நிற்கிறது. இளம்பூரணர் ''சிறந்தது பயிற்றலாவது அறத்தின்மேல் மன நிகழ்ச்சி'' என்று எழுதிச் சென்றனர். அறம் என்ற சொல்லால் அவர் துறவறத்தையே குறித்திருக்கலாம். இல்லறம் செய்திருப்பார் மேலும் அறம் கருதுவார் எனின் அது துறவறமாவதில் இழுக்கில்லை. கி. பி. 12ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த நம்பி அகப்பொருள்காரர்,

''மக்களொடு மகிழ்ந்து மனையறம் காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனும் தலைவியும் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறம் காப்ப''

என்று கூறிச் சென்றனர். அவரும் மேற் கண்ட தொல்காப்பியச் சூத்திரம் துறவையே உணர்த்துவதாகவே நினைத்துள்ளார் என்பதறியலாம். இளம்பூரணரும் நாற் கவிராச நம்பியும் பொருள் கொண்டவாறே வழிவழி வந்த அகத் துறையினர் விளக்கத்தை உளத்துட் கொண்டே நச்சிஞர்க்கினியர் இங்கு உரை செய்திருக்கின்ருர்.

இச்சூத்திரத்தில் வரும் **சிறந்தது** என்ற சொல் துறவினை உணர்த்துவதாகக் கொண்ட அவருக்கு **'யாத்த சிறப்பின் வாயில்கள்'** என்ற தொடரும் துறவு நோக்குவதாகவே தோன்றிற்று. தலைவனும் தலைவியும் பெற்ற துறவுகண்டு உருகித் தாமும் அதன் வசப்படுவதே வாயில்களுக்குரிய சிறப்பு என்று கருதினர்[4].

இனி நச்சிஞர்க்கினியர் கூறும் உரை பொருந்துமாற்றைச் சிறிது இங்கு சிந்திப்பதும் முறையே ஆகும்.

---

4 ''தலைவனும் தலைவியும் பெற்ற துறவின்கண்ணே மனம் பிணிப்புண்ட சிறப்பினை உடைய வாயில்கள் என்று கூறுவர் ஆசிரியர்.''

— நச்சி. உரை - கற்பு - 52.

வாயில்களின் கூற்றுக்களைத் தொகுத்துக் கூறும் இடத்திலேயே வாயில்கள் பன்னிருவர் என்னும் நூற்பாவையும் கூறத்தான் வேண்டும் என்ற கடப்பாடு இல்லை. தொல்காப்பியர் நூலின் அமைப்பு முறைகளை அறிந்தவர்கள் இதனை நன்கு உணரலாம். 'காமஞ் சான்ற வாயில்' என்ற நூற்பா உணர்த்துவதனைத் தொடர்ந்தே அதனை அடுத்துவரும் நூற்பாவும் உணர்த்த வேண்டும் என்ற நியதியும் இல்லை.

கூத்தர், விறலியர், பாணன், பாடினி, கண்டோர் ஆகியோர் பிரிவாற்ருமல் தாமும் துறவு கொள்வர் என்பதும் பொருந்தவில்லை. இலக்கியச் சான்று காணுமாறில்லை. எடுத்துக் காட்டாகக் கோப்பெருஞ்சோழன் துறந்துழி தாமும் துறந்த பிசிராந்தையாரையும் பொத்தியாரையும் காட்டினர். அவரெல்லாம் அகவாழ்க்கையில் பாங்கர்களாகத் துணை நின்று பின் துறவிற்கு இடையூருமல் முன் சென்று துறந்தவர் ஆகமாட்டார். அவர்கள் வாழ்வு நட்பு மேம்பாட்டைக் காட்டும் அரிய இலக்கியமே ஆகும்.

நம்பியகப் பொருளில் வரும் ''தொலைவில் சுற்றமொடு துறவறம் காப்ப'' என்ற தொடர் உணர்த்தும் தொலைவில் சுற்றமாவார் யாவர் என்று காணுதல் வேண்டும். பாணன், பாடினி, கூத்தர் ஆகியோர் 'தொலைவில் சுற்றங்கள்' ஆவதற்கில்லை. தொலைவில் சுற்றம் என்பதற்கு எல்லையில்லாத சுற்றம் என்று பழைய உரை கூறுகிறது. வனத்தின்கண் துறவு மேற்கொண்டு நன்னெறிச் செல்லும் துறவியரே அங்ஙனம் குறிக்கப் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறு இந்நூற்பா துறவை உணர்த்துகிறதா என்று ஐயம் எழும்போது அதனை அடுத்துவரும் நூற்பாவும்

துறவினையே உணர்த்திற்றென்று துணிந்து கூறுமாறு யாங்ஙனம்?

ஒரு மனிதன் தன் வாழ்வில் கண்டவற்றையும் கேட்டவற்றை தானே அனுபவித்து அறிந்தவற்றையும் கொண்டு உணர்ந்த உண்மைகளைத் தம் மக்கட்கும் பிறர்க்கும் எடுத்துக் கூறி அவர்களின் எதிர்கால வாழ்க்கையை உருவாக்க உதவுவான். முன்னோர்கள் கண்ட அனுபவ ஞானத்தைப் பெற்றே மனித சமுதாயம் மேலும் மேலும் புதிய உரத்தோடு வளர்ந்துகொண்டு செல்கிறது. எனவே இல்லறம் செய்த தலைமகனும் தலைமகளும் மக்களும் சுற்றமும் சூழ இருந்து தம் வாழ்வில் சிறந்தனவாகக் கண்டுணர்ந்த அனுபவ உண்மைகளையும் மற்றபடி வாழவேண்டிய வழிகளையும் தம் மக்கட்குப் பயிற்றுவர். ஈண்டு **'சிறந்தது பயிற்றல்'** என்ற தொல்காப்பியத் தொடர் இதனையே கருதுவதாகக் கொள்ளலாம். கல்வி கேள்விகளானும் அனுபவத்தானும் தெளிந்த உண்மைகளைத் தம் மக்கட்குப் பயிற்றுதலே சிறந்தது பயிற்றுதலாம். வாழ்க்கையில் ஒருவன்கொண்ட முடிந்த உணர்வுகள் அவனோடு அழிந்துவிடக் கூடாது. அவன் சென்ற வழியிலே செல்லும் பிறரும் நன்னெறியும் நற்பயனும் பெற்றுய்யவேண்டும் என்பதே இந் நூற்பா உணர்த்தும் கருத்தாகும்.

தொல்காப்பியர் கருத்து இதுவோ அதுவோ என மயக்கம் ஒரு பக்கம் இருக்க அது எதுவாயினும் ஆகுக என விடுத்து மேற் செல்வோம். நமக்கு இப்பொழுது

வேண்டுவது நச்சினார்க்கினியர் கருத்தேயாகும். இந் நூற்பா உரையில் கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்த பொழுது பிசிராந்தையாரும் பொத்தியாரும் சென்று வடக்கிருந்து உயிர் நீத்த செய்தி எடுத்துக் காட்டாகக் காட்டப்பட்டிருத்தலின் வடக்கிருந்து உயிர் நீத்தலும் துறவின் ஒருவகை என்பது நச்சினார்க்கினியர் கருத்தாம்.

இல்லறத்திலிருந்து இளமைக்காலத்தே காம இன்பத்தைச் சரிவரத் துய்த்தே அதனின்று விடுபடவேண்டும். நினைப்புப் பெருகியிருக்க இன்பம் துய்க்காது ஒழியின் அது மீண்டும் பிறத்தற்கு ஏதுவாக முடியும் என்று நச்சினார்க்கினியர் நினைக்கிறார். காம இன்பத்தை நிறைவு பெறத் துய்க்கவும் வல்லமை வேண்டும்; வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டால் அதே கணத்தில் விடுபடவும் வல்லனாதல் வேண்டும்.

சிறுபாணாற்றுப் படையில் நல்லியக்கோடன் என்பான் **'கருதியது முடித்தலும் காமுறப்படுதலும்'** (212-1) உடையனாகக் கூறப்படுகிறான். உரையெழுதிய நச்சினார்க்கினியர்,

> **''தன்னெஞ்சு கருதிய புணர்ச்சியைக்**
> **குறைகிடவாமல் முடிக்க வல்ல**
> **தன்மையையும்''**

என எழுதி மேலும் அவ்வுரைக்கு விளக்கமாக,

> **''நுகர்தற்குரிய மகளிரை நுகர்ந்து பற்றறுக்கால்**
> **பிறப்பறுமையின் கருதியது முடிக்கவேண்டும் என்றார்''**

என்ற குறிப்பையும் எழுதிச் சென்றனர்.

பற்றுவிட வேண்டும். பற்று பிறவித் துன்பத்திற்குக் காரணமாவது. ஆனால் சரிவர நுகராமல் காமத்திற் பற்றுவிட்டால் அதனால் பயனேதும் விளையாமை மட்டு மின்றி பிறப்பிற்கும் அது காரணமாகி விடுகிறது.

குறைவற நுகர்தல் என்றால் பொருள் என்ன? துய்க்கும் நெறியறிந்து துய்த்தலும் முற்ற முடியத் துய்த்தலும் என இருவகைப்படுத்திக் கொள்ளலாம். சீவகன் துய்க்கும் நெறியறிந்து அக் கலை தெளிந்து நலங்கண்டவன் என்பதும் கட்டியங்காரனோ துய்க்கும் நெறி தெரியாதவன் என்பதும் நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

சீவகசிந்தாமணியில் அனங்கமாலை என்னும் நாட்டியக் கலை வல்ல நங்கையைக் கொடியவனாகிய கட்டியங்காரன் வலிந்துபற்றிச் சென்று இன்னற்படுத்தினான்.

* "ஊனுடை உருவக் காக்கை இதழ்உகக் குடைந்திட் [டாங்குக்
கானுடை மாலை தன்னைக் கட்டியங்காரன் சூழ்ந்து
தானுடை முல்லை யெல்லாம் தாதுகப் பறித்திட்டானே."
— 686.

இச் செய்யுளில் முல்லை என்ற சொல்லுக்குக் கற்பு என்ற அழகிய பொருளை எடுத்துப் பொருத்திக் கூறிய நச்சினார்க் கினியர் மேலும் விளக்கமாக "இதனால் **புணரும் நெறி**

---

* ஊனுடை உருவக் காக்கை = பிணத்திலே அமரும் இயல் [புடைய காக்கை
இதழ் உக = தாமரை இதழ்கள் உகும்படி.

**அறியாமை கூறினார்''** என்று எழுதிச் சென்றார். பிணத்திலிருந்த காக்கை தாமரைப் போதினைப் புல்லிக் குடைந்தது போல எனத் தேவர் இச் செய்யுளின் முன்னிரண்டு அடிகளில் குறிப்பிட்டார். பிணத்திலே உட்காருங் காக்கை கட்டியங்காரனுக்கும், தாமரை அனங்க மாலைக்கும் உவமைகளாயின. பிணத்தின் மேல் அமரும் காக்கை மெல்லிய தாமரைமேல் அமரவும் முடியாது; அமரவும் அறியாது. அதன் விளைவால் தாமரை கெடும். தாமரை மலர் மெல்லியது. வாய்வல் காக்கை அதன் செவ்விதலைப்படாது. **'தாதுகப் பறித்திட்டானே'** என்ற தொடரில் **உக, பறித்திட்டான்** என்ற சொற்களை நினைத்தால் கட்டியங்காரன் அதன் மென்மை அறிந்து தலைப்படாமை நன்கு புலனாம். வள்ளுவர் கூறிய,

> ''மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
> செவ்வி தலைப்படு வார்''
>
> — அதிகாரம் 129 - குறள் 9

என்ற குறளினைத் துணையாகக் கொண்டு நோக்கின் ஈண்டு நச்சினார்க்கினியர் எழுதிய தொடரின் பொருள் இனிது புலனாம். சங்க இலக்கிய வரன் முறை அறிந்து முல்லைக்குக் கற்பு என்று எழுதிய திருவுள்ளம் ஒழுங்கோடு கூடிய காமத்தையும், அக் காமத்தைக் கலை வழி அறிந்து பெறும் சிறப்பையும் ஈண்டு கருதுகின்றமை அறியலாம்.

இனி முற்ற முடிய நுகர்தலாவது யாது என்று காணலாம். அது முதுமைக் காலத்தில் காமத்தை விடுவதா?

முதுமைக் காலத்தில் காமத்தை நாம் விடவேண்டும் என்பதில்லை. அது தானே நம்மை விட்டகன்றுவிடும். எனவே அதற்கென்று ஓர் அரிய முயற்சியும் சிறப்பும் வேண்டப்பெறா. நுகர்ச்சி முடிந்த முதுமைக்காலத்தில் துறக்கும் துறவை நச்சினார்க்கினியர் கருதவில்லை. இளமைக் காலத்துத் துறவோ இயலாதது. இளமை தாண்டி நடுவயது கடந்து காம உணர்வு அற்றுப் போகாத நிலைமையில் முதுமை வாரா முன்னம் துறவு மேற்கொள்ள வேண்டும். மனித முயற்சியும் வெற்றியும் அதன்கண் விளங்கித் தோன்றும். நரைதிரை வந்து பல் விழுந்த காலத்தும் இல்லறம் செய்திருத்தல் கூடாது. இக் கருத்தினை,

> "தலைவனும் தலைவியும் மூப்பு வருவதன் முன் துறப்பார் என்றலிற் பல்லு விழும் பருவத்தும் நரை வரும் பருவத்தும் இல்லறம் செய்திருப்பாரென்றல் பொருந் தாமை உணர்க" — கலித்தொகை - 22 - உரை

என்ற உரைத் தொடர்களால் அறியலாம்.

'காமஞ்சான்ற கடைக்கோட் காலை' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை விளக்கம் எழுதும்போது,

> "சான்ற காமம் நுகர்ச்சியெலாம் முடிந்தமை
> தோன்ற; இது கடையாயினார் நிற்கும் நிலை
> என்றுரைத்தற்குக் கடை என்றார்,"

என எழுதிச் சென்றனர். அப்படியாயின் சிறுபாணாற்றுப் படையில் குறைகிடவாமல் நுகர்ந்து முடித்தலை ஒரு

சிறப்பாக நல்லியக் கோடனுக்குக் கூறியவர் இங்கு நுகர்ச்சியெல்லாம் முடிந்த நிலையில் துறவு கொள்வாரைக் கடையாயினார் என்று குறிப்பிடுவது வியப்பாக இருக்கின்றதல்லவா! ஈண்டு கூறுவது காமநுகர்ச்சி அற்றுப் போம் முதுமைக் காலத்துத் துறவையாகும். ஆண்டு கூறியதோ நுகரவேண்டிய இளமைக் காலத்து நெஞ்சு கருதியவாறு குறைகிடவாமல் துய்த்தலையாகும்.

உள்ளமும் உடலும் காமத்தின்மேல் செல்லாது இளமைக் காலத்தில் துறக்க முடியுமாயின் அத்துறவு தலையாயது என்றும், இல்லறத்தில் நின்று மூப்புவாரா முன்னம் துறப்பது இடைப்பட்ட நிலை என்றும், மூப்பு வந்தபின் துறத்தல் கடைப்பட்ட நிலை என்றும் நச்சினார்க்கினியர் கருத்திற்கேற்ப மூன்று வகையாகத் துறவினைப் படுத்தலாம்.

'மிக்க காம வேட்கை **தீர்ந்துழி** தொலைவில் சுற்ற மொடு துறவறம் காப்ப' என்று கூறும் நம்பி அகப் பொருள் முதுமையில் துறக்கும் துறவையே கூறிற்றுதல் வேண்டும். நச்சினார்க்கினியரோ முதுமை வாராமுன் துறக்கும் துறவையே வலியுறுத்துகிறார்.

எப்படியும் எது எவ்வாறாயினும் ஒருவன் துறவு பெற்றேயாகவேண்டும். இளமைக் காலத்தே துறக்க; அது இயலாதாயின் நடுவயதிலாயினும் துறக்க; நடுவயதி லும் துறக்காவிட்டால் முதுமைக் காலத்தேயாயினும் துறக்க என்பதே நச்சினார்க்கினியர் கூற்றின் திரண்ட

கருத்தாகும். இலலறம் துறவின்றி யமையாது என்பது அவர் கருத்தாகலின்.

துறவு பற்றி இவர் கொண்டிருக்கும் கருத்துக்களையும் உறுதியையும் நோக்கினுல் இவர் வைதிகராயினும் சைன சமயச் செல்வாக்கு ஒருவாறு படிந்திருப்பதைக் காண லாம். சீவக சிந்தாமணிக்கு உரை எழுதிய காலை சைன சமயத்தை நன்கு அறியவும் சைனசமயத் துறவிகளோடு நன்கு பழகவும் இவர் வாய்ப்புப் பெற்றிருத்தல் கூடும்.

மனிதர்கட்கு இயன்ற நன்னெறி இல்லற வழிச்செல்லும் துறவறம் என்பதை நச்சிஞர்க்கினியர் முழுவதும் நம்பி ஞலும், இல்லறத்திற் புகாமலேயே துறக்கும் அரிய வழி ஒன்று உண்டு என்பதை நினைவுகூராமல் அவரால் செல்ல முடியவில்லை. மன நிகழ்ச்சியும் உடல் நிகழ்ச்சியும் இன்றிக் காம வயப்படாது நிற்க முடியுமெனின் அதனை அரிய நிலை என்று ஒத்துக்கொள்வதில் தவறென்ன இருக்கிறது? மனிதன் உடல் இயற்கையை வென்று வாழ முடியாதா என்று நினைக்கும் மனித ஆசைகளுள் அதுவும் ஒன்று. இறைவன் கூட மக்கள் இல்லற வாழ்வைப் பெற்றுய்வதற்காகத்தான் இல்லறம் செய்து காட்டுகிருன் என்பர். இவ்வுண்மையைத் திருமுருகாற்றுப் படையில்,

"ஒருமுகம்
'குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே"

என்ற வரிகட்கு விளக்கமாக,

> "காம நுகர்ச்சி இல்லாத இறைவன் இங்ஙனம் நகையமர்ந்தான் உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென்றுணர்க 'அது தென்பாலுகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன் என்பதனுள் பெண்பாலுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர் விண்பாலியோகெய்தி வீடுவர்காண் சாழலோ' என்பதனுன் உணர்க".

என்று எழுதிச் சென்றமை நோக்கினல் நச்சினார்க்கினியர் உள்ளம் நன்கு புலனும். உலகில் இல்லறம் நடைபெற வேண்டும் என்று நினைக்கும் இறைவன் திருவுள்ளமே நச்சினார்க்கினியர் திருவுள்ளமும் ஆகும்.

❋

# நச்சினார்க்கினியரும் அனங்கமாலையும்

## 1

**கா**ந்தருவதத்தை அழகு மிக்க தேவமாது. இசை நலம் உடையவள். வீணை மீட்டுவதில் வல்லவள். வெள்ளி மலையிலுள்ள வித்தியாதர மன்னனாகிய கலுழவேகன் என்பவன் மகள். அவளுக்குத் திருமணம் இராசமாபுரத்திலேதான் நடக்கும் என்று சோதிடர்கள் சொன்னார்கள். அது கருதி வித்தியாதர மன்னன் அவளை இராசமாபுரத்திற்கு வணிகன் ஒருவனோடு அனுப்பிவைத்தான். அவ்வணிகன் கட்டியங்காரன் உடன்பாடுபெற்று ஒரு மண்டபம் அமைத்தான். அங்கே வீணைப்போருக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கலை நலம் மிக்க காந்தருவ தத்தையை எவன் வீணை மீட்டி வெல்கிறானோ அவனே அவளுக்கு மணவாளன் ஆவான் என்ற செய்தி யாங்கணும் பரப்பப் பெற்றது. எழில் நலமும் கலைநலமும் உடைய கன்னியை யாருக்குத்தான் மணக்க விருப்பம் இராது? பிராமணர்கள் வந்தனர்; அரசர்கள் வந்தனர்; வணிகர்கள் வந்தனர். இப்படி ஒவ்வொரு வருணத்தாரும் முறையாக வந்தனர், ஆனால் தோற்றனர். வர்ணாஸ்ரம அடிப்படையில் இவ்வருகையை ஏன் ஆசிரியர் காட்டவேண்டும்? பின்னால் கட்டியங்காரன் வர்ணாஸ்ரமப் பற்றைத் தாண்டிவிட்டு எல்லோரையும்

சீவகனுக்கு எதிராகத் திருப்பப் பார்க்கிருன். 'அரசன் மகளை அரசன் மணப்பதன்றி ஒரு வணிகனையா மணக்க விடுவது?' என்று கட்டியங்காரன் கூறியதும் எல்லா மன்னர்களும் சீவகனுக்கு எதிராகத் திரும்பிவிடுகின்றனர். எனவே முன்னேட்டமாக ஆசிரியர் வர்ணுஸ்ரம முறைப்படி இந்த வருகையைக் காட்டியிருக்கலாம்.

ஒருவரும் அவளை வெல்ல முடியவில்லை. பலர் வருவதும் தோற்பதும் தோல்விக்கு வருந்துவதுமாக ஆறு நாட்கள் கழிந்தன, ஏழாம்நாள் வந்தது. சீவகன் செல்ல நினைத்தான். இனி இவளை வெல்வதற்கு யார் இருக்கிருர்கள் என்ற நிலைமையில்தான் சீவகன் அங்கே வருகிருன்.

* தேனுயர் மகரவீணைத்
தீஞ்சுவை இவளை வெல்வான்
வானுயர் மதுகை வாட்டும்
வார்சிலைக் காமனுகும்
ஊனுயர் நுதிகொள் வேலீர்
ஒழிக ஈங்கு இல்லைஎன்ருன்
கானுயர் அலங்கல் மாலைக்
கட்டியங் காரன் அன்றே!

— 664, சிந்தாமணி.

'தேனினும் இனிய தீஞ்சுவை உடையது மகர வீணை. அவ்விசை எழுப்பும் அவளை வெல்வதற்கு இம் மண்ணுலகில் யார் இருக்கிருர்கள்? தேவர்களின் அறிவையும்

* வான் உயர் மதுகை—வானினும் உயர்ந்த வலிமை அல்லது வான் என்பதனை இட ஆகுபெயராகக்கொண்டு தேவர்களின் உயர்ந்த வலிமை அல்லது அறிவு என்றும் பொருள் கொள்ளலாம். ஊனுயர் நுதிகொள் வேலீர்—பகைவர்களின் தசைகளில் குத்தி உயர்ந்த கூரிய நுனிகொண்ட வேலையுடைய மன்னர்களே. கான் உயர் அலங்கல்—மணத்தால் உயர்ந்த மாலை.

மயங்கவைக்கும்படியான காமன் ஒருவனால்தான் அவளை வெல்ல முடியும். ஆதலால் மன்னர்களே யாழ் மீட்டும் வீண் முயற்சியை விட்டொழியுங்கள்' என்று கட்டியங்காரன் கூறுகிறான். மிக மிக அரிய செயல் என்ற முடிவு கட்டியங்காரன் உள்ளத்தில் வளர்ந்து வேரூன்றிய பின்னரே சீவகனை நூலாசிரியர் அங்கே கொண்டுவருகிறார்.

தான் யாழ்ப் போருக்குச் செல்ல முடிவு செய்திருப்பதைத் தன் தந்தைக்குத் தெரிவிக்கும்படியாகத் தோழன் புத்திசேனனிடம் சொல்லி அனுப்பினான்.

* "தம்பியும் தோழன்மாரும்
தானு மற்றெண்ணிச் சூழ்ந்து
வெம்பிய வீணைப்போருட்
செல்குவம் யாமும் முன்னே
தும்பறப் புத்திசேன
சொல்இது குரவற் கென்ன"

— 666, சிந்தாமணி.

இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

"இக் காரியத்தைப் புத்திசேனனே, நீ சென்று கன்னிபிடத்து வேட்கையால் செல்கின்றான் அல்லன்; கல்வி தோற்றுவித்தற்குச் செல்கின்றானென்றுகொள்ளும்படி குரவற்குக் கூறென்று கூற"

என உரை எழுதினார். தம்பியரோடும் தோழர்களோடும் எண்ணினான்: அவ்வெண்ணத்தைத் தடை விடைகளால் கூடி ஆராய்ந்தான். ஒரு முடிவுக்கு வந்த பின்னர் தன் தந்தைக்குச் செய்தியைத் தெரிவிக்கச் செய்கிறான்.

---

* வெம்பிய வீணைப்போர்—அரசர்கள் தோற்று மனம் வெம்பிய யாழ்ப் போர். தும்பு அற—சிக்கற. குரவற்கு—தந்தையாகிய கந்துக்கடனுக்கு.

கன்னியிடத்துக் கொண்ட காதலால்தான் சீவகன் செல்லுகிருன் என்று தந்தை நினைத்துவிட்டால் என்ன செய்வது? காளைப் பருவம் அல்லவா? பிறரை அப் படியும் நினைக்கத் தூண்டும். கற்ற கல்வியை வெளிப் படுத்துவதற்காகவே தன் மகன் செல்லுகிருன் என்று தந்தை நினைக்கவேண்டுமாம்! அப்படி நினைக்கும்படி யாகத் தோழன் எடுத்துச் சொல்லவேண்டுமாம். கன்னி யிடத்து வேட்கையால் செல்லாமையும் கலைநலம் காட்டச் செல்லுகின்றமையும் பாடலில் காணப்படவில்லை. இத் துணையும் கதைக்கேற்பவும் சீவகனின் பண்பு நலத்திற் கேற்பவும் நச்சினர்க்கினியர் நினைந்து நினைந்து சொல்லு வனவாம்.

சீவகனை ஒப்புயர்வற்றவனாகத் 'தன்னிகரில்லாத் தலைவ னாக' ஆக்கிக் காட்ட விரும்புகிருர் நூலாசிரியர். உரை சொல்லவந்தவரோ தேவருக்கு மேல் ஒருபடி சென்று விடுகிருர். தேவர் விட்ட இடம் தொட்ட இடங்களைக் கூட ஒன்றுவிடாமல் பூசி மெழுகிவிடுகிருர். இருவர் கூட்டு முயற்சியாலும் சீவகன் அரிய மனிதனாக அல்லது தெய்வீக மனிதனாகக் காட்சியளிக்கிருன். இந்தக் கருத்தை நான் இங்கே விரித்துக் காட்டாமல் மேற் செல்லுகிறேன்.

**2**

**பு**த்திசேனன் யாழ்ப் போருக்குச் செல்வதனைக் கந்துக் கடனிடம் சொல்லும்போது நாகமாலை என்பாள் அனுப் பிய பூங்கொடி ஒருத்தி ஓர் ஓலையைக் கந்துக்கடனிடம் நீட்டினள். அனங்கமாலை காரணமாகச் சீவகன்மேல் கட்டியங்காரன் மிகுந்த பகை பூண்டுள்ளான்

என்பதனையே அவ்வோலை கூறிற்று. அனங்கமாலை ஆடல் பாடல் வல்ல அழகி. பரத்தையர் குலத்திலே பிறந்தவள். சீவகன் வரலாற்றிலே தடுக்கி விழுந்த இடமெல்லாம் பெண்களையும், திருமணத்தையும்தான் பார்க்கிறோம். அவன் ஒன்றுக்குப் பின் ஒன்றாக எட்டு மகளிரை மணந்து கொள்கிறான். போதாதென்று இரண்டு பரத்தையர்களையும் கொண்டுவந்து சேர்க்கிறார் தேவர். ஆடல் பாடல் வல்ல அழகிகள் இல்லாவிட்டால் அரச வாழ்வு நிரம்பாதென்று அவர் நினைத்தாரோ என்னவோ!

காந்தருவதத்தையின் சந்திப்பைக் காட்டுமுன் அனங்க மாலையைக் கொண்டு வந்து தேவர் அறிமுகப்படுத்து கிறார். பதுமையார் சந்திப்பைக் காட்டுமுன் மற்றொரு பரத்தையான தேசிகப் பாவையைக் கொண்டுவந்து ஆட விடுகிறார்.

தேசிகப் பாவையையும் அனங்கமாலையையும் தேவர் சரியான இரண்டு காரணம் பற்றியே கொண்டுவருகிறார் என்பதை மேலும் மேலும் சிந்தித்தால் அறியலாம். இரண்டு பொதுமகளிர்களும் கதை வளர்ச்சியுறுவதற்கு வேண்டிய துணை புரிகின்றனர். சாதாரணக் கதை யுறுப்பினர்கள்தாம் என்றாலும் கதையில் முக்கியத்துவம் அவர்கட்கில்லை யென்றாலும் அவர்கள் சாதனை பெரி தாகவே இருக்கிறது என்று சொல்லிவிடலாம். அவர் களால் கதை விறுவிறுப்பும் ஓட்டமும் பெறுகிறது.

இவ்விரு பரத்தையரில் நச்சினார்க்கினியருக்குத் தேசிகப் பாவையைத்தான் சிறிது பிடித்திருக்கிறது. அனங்க மாலையை முழுவதும் பிடிக்கவில்லை. தேசிகப் பாவை

யென்ற பெயரே அவர் உள்ளத்தில் ஓர் உவகையைத் தூண்டுகிறது. 'தேசிகப் பாவையன்னாள்' என்பதற்கு அவள் கல்வி கேள்விகளில் மிக்கவள் என்று உரை சொல்லி மகிழ்கிறார்.

> "தேசிகப்பாவை அவள் பெயர்; அத்தன்மையாளென்றது அவள் கல்வி முதலியவற்றைச் சுட்டிற்று"
>
> [ 1261 — உரை. ]

சீவகன் அனங்கமாலையை ஏற்றுக்கொண்டாலும் தேவர் உள்ளமும் அதுவானாலும் நச்சினார்க்கினியர் அதனை அனுமதிக்கவில்லை. நூலாசிரியர் எப்படிக் கூறினும் சரி, அது தனக்குச் சரியாகவும், முறையாகவும் படாவிட்டால் தன் உரை வன்மையைக் கொண்டு மாற்ற முற்பட்டு விடுகிறார். நூலாசிரியர் சொல்கின்றவற்றில் சில பிடிக்கவில்லை யென்றால் சொற்களையும் வரிகளையும் தமக்கேற்பத் திருத்திவிடும் இலக்கியப் பகைவர்களைக் காட்டிலும் நச்சினார்க்கினியர் பல நூறு மடங்கு உயர்ந்தவர். நூலாசிரியன் வைத்திருக்கும் சொல் வைப்பு முறையை மாற்றுவார்; சில சமயங்களில் அவன் நினைக்காத பொருளை நினைப்பார் என்பதைத் தவிர வேறில்லை. இதில்தான் அவருடைய பெருமை சிறுமை ஆகிய இரண்டும் அடங்கியிருக்கின்றன. அனங்கமாலைக்கு சீவகனிடத்தில் ஆருத காதல் உண்டே தவிர சீவகன் அவளை விரும்பினவன் அல்லன் என்றும் அனங்க மாலையின் காதல் பெண்பாற் கைக்கிளை யென்றும் அவர் கருதுகிறார். அக் கருத்தை அடிக்கடி வலியுறுத்துகிறார். சீவகனே நேரில் வந்து அனங்கமாலையிடம் அன்பு உண்டென்று கூறினும் நச்சினார்க்கினியர் ஒத்துக்கொள்ளப் போவதில்லை.

அனங்கமாலை ஆடவந்தாள். அவளுக்கு ஒப்பனை செய்யுமாறு சீவக நம்பி அழைக்கப்பட்டான். அணி நலம் செய்த அந்தக் காட்சியை அவளால் மறக்கமுடிய வில்லை. அரசன் கட்டியங்காரன் முன்னிலையில் ஆடல் நடந்தது. ஆடல் தொடங்கு முன்பு அவள் உள்ளத்தில் சுழல் தொடங்கிவிட்டது. ஆடும்போது சீவகன்மேற் சென்ற ஆர்வத்தை அவளால் கட்டுப்படுத்த முடிய வில்லை. அது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கி விட்டது. பொதுமகளாயினும் ஒருவன்மேல் உண்மை யான காதல் கொண்டு வாடுகின்ற செய்தியை இரக்கத் தோடு கூறுகிற தேவர் அவளைப் பின்னால் சீவகனிடம் சேர்த்து வைத்துவிடத் தவறவில்லை. ஆனால் நச்சினார்க் கினியரோ இறுதிவரை அனங்கமாலை சீவகனை அடை யாதவாறு செய்கிறார்.

அரசன் கட்டியங்காரன் முன்னிலையில் ஆடுகின்றோம் என்பதைக்கூட அப்பொழுது அனங்கமாலையால் உணர முடியவில்லை. அரசு அதிகாரம் ஆகிய இவற்றிற்கு மேலே வலியுள்ளதாகக் காதல் எழுந்தது. உள்ளத்தைச் சீவகனிடம் பறிகொடுத்துவிட்டு அவள் ஆடுவதனைக் கட்டியங்காரன் கண்டான். அவனால் பொறுக்க முடிய வில்லை. இழுத்துவருமாறு ஆணையிட்டான். இழுத்து வந்து பல அல்லல்கட்கு உள்ளாக்கினான். அவளோ சீவகன் பெயரையே சொல்லிச் சொல்லி அவன் நலம் கூறிக் கூறி அழுதுகொண்டிருந்தாள். தனக்கு முன்னால் பிறனொருவன் புகழையே அரற்றிக் கொண்டிருக்கி றாளே என்று நைந்தான் கட்டியங்காரன். அப்பொழுது தான் அந்தச் சீவகன் யார்? அவன் எத்தகையவன்? என்று கேள்விகள் அவன் உள்ளத்திலே எழுகின்றன. சீவகனைப் பற்றித் தன் அமைச்சர்களிடம் கேட்டான்.

அவர்கள் அவன் அருமை பெருமைகளை எடுத்துக் கூறிய பின் எத்துணையோ குடிமக்களுள் சீவகனும் ஒருவனாக அவனால் நினைக்க முடியவில்லை,

அவன் உள்ளத்தில் அவனையறியாமல் ஏதோ ஒருவகை அச்சம் குடிகொண்டுவிட்டது. தான் சூழ்ச்சியால் பெற்ற அரசை யாரோ பறித்துக்கொள்ள வருவதுபோல் உணரத் தொடங்கினான். அப்பொழுதுதான் சீவகனை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்று நினைக்கிறான் கட்டியங்காரன். அதுவரை அவன் அவ்வாறு நினைக்கவே இல்லை. அந்த நினைப்பு எழுவதற்கு அனங்க மாலைதான் காரணம். பகைவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டு விட்டனர். நேரடியான பகை எழத் தொடங்கிவிட்டது. பகைமைச் சுழல் சுழல்கிறது. இரு கட்சிகள் ஒன்றையொன்று நேரடியாக எதிர்க்கின்ற கட்டம் வந்துவிட்டது; கதைக்கு ஒரு விறுவிறுப்பு வந்து சேர்கிறது. அறம்-மறம் ஆகிய இரு கட்சிகள் தொடக்கத்திலேயே காட்டப்பட்டுவிட்டன. ஆனாலும் அவை ஒன்றை ஒன்று எதிர்த்து முட்டிமோதுமாறு விடப்படவில்லை. காவியக்காரர் அம் மோதுதலை ஏற்படுத்த அனங்கமாலையைத்தான் பயன்படுத்திக் கொள்கிறார்.

அனங்கமாலையால்தானே சீவகன் மேல் கட்டியங்காரனின் தீயநோக்கம் விழுகிறது என்று நினைக்கலாம். ஆனால் அந்தத் தீயநோக்கம் என்றாவது ஒருநாள் விழுந்தே யாகவேண்டும். பின் நன்மை தீமையை எப்படி வெல்லமுடியும்? தர்மம் அதர்மத்தை எப்படி வெல்லும்?

தேசிகப்பாவையும் அனங்கமாலையைப் போலவே ஆடும்போது சீவகனைக் காண்கிறாள். அவள் ஆயினும்

ஆகிவிடுகிருள். பல்லவநாட்டு இளவரசன் முன்னுல் ஆடிக்கொண்டிருக்கிருள். அவ்வரசன் நல்லவன். அவன் தேசிகப்பாவையின் நோக்கம் எங்கே செல்கிறது என்று பார்த்தான். சீவகனைக் கண்டான். கண்டதும் அவனுள்ளம் அலுத்துப் போகவில்லை. காதலினுல் களித்தது.

* போதெனக் கிடந்த வாட்கண்
புடைபெயர்ந்து இமைத்தல் செல்லாது
யாதுஇவன் கண்டது என்றுங்கு
அரசனும் அமர்ந்துநோக்கி
மீதுவண்டரற்றும் கண்ணி
விடலையைத்தானும் கண்டான்
காதலில் களித்தது உள்ளம்
காளையைக் கொணர்மின் என்ருன்

வருக என்றழைத்துத் தனக்குற்ற உயிர்த்தோழனுக இருக்குமாறு [வேண்டிக்கொண்டான். நல்லவன் முன் ஆடிய கலையரசி நன்மை பெற்ருள்; தீய அரசன் முன் ஆடிய கலையரசி தீமையுற்ருள். நல்லவனே காளையைக் கொணர்க என்ருன். தீயவனே நங்கையைக் கொணர்க என்ருன்.

தேசிகப்பாவையால் பல்லவநாட்டு இளவரசனின் அன்பு நோக்கம் சீவகன் மேல் விழுகிறது, அனங்கமாலை கொடியவன் முன்னர் நின்று ஆடினுள். அவள் கலை நலம் கொடுமையைத் தூண்டிவிட்டுவிட்டது. கயமை எழுந்து அவளைத் தொடர்ந்துவிட்டது. தேசிகப்பாவை யார் முன்னர் ஆடினுளோ அவ்வரசன் நல்ல அரசன். அதனுல் நன்மை தேடிவருகிறது.

---

* போது—மலர்; வாட்கண்—வாள் போன்ற கண்; புடைபெயர்ந்து—இப்புறம் அப்புறம் அசைந்து; மீது வண்டரற்றும்—வண்டுமொய்க்கும்; கண்ணி—மாலை; விடலை—காளையாகிய சீவகன்.

## 3

அனங்கமாலை ஆடிக்கொண்டிருக்கும் போதே சீவக னுக்கு ஓர் ஓலை எழுதி அனுப்ப வேண்டுமென்று நினைக் கிறாளாம். அதற்கு ஒரு தோழி வேண்டுமே! தோழியிருந் தால் ஓலைக்கு எங்கேபோவது? மெல்லப் புன்னகை பூத் தாள். எழில் ததும்பும் அப்புன்முறுவலே தோழியாயிற்று. காதளவோடிய கண்ணே ஓலையாய்விட்டது. வேறென்ன வேண்டும்? எத்தனை எத்தனை ஆயிரம் குறிப்புக்களை நல்கினாள்! கண்ணைவிடக் காதலுக்கு உற்ற துணை வேறுண்டா?

> '' ஆடினாள் முறுவல் என்றும் தோழியை ஐயன் காண
> ஓடரி நெடுங்கண் என்னும் ஓலையை எழுதிவிட்டாள் '

இந்த ஓலையை எப்படிச் சீவகன் ஏற்றுக்கொண்டான்? சீவகனின் மனோ உணர்ச்சிகளை நூலாசிரியர் சித்தரித்துக் காட்டவில்லை. அவன் அனங்கமாலையை விரும்புகிறானா? அல்லது வெறுக்கிறானா? காதலின் ஒருபக்கம் சித்தரிக்கப் படுகிறதே தவிர மறுபக்கம் சித்தரிக்கப்படவில்லை. அப்படி விட்டுச் சென்றதே நூலாக்கத்தின் ஒரு சிறப்பாக அமைந்திருக்கிறது. நூலாசிரியர் விரித்துக் காட்டாத தனை உரையாசிரியர் விரித்துக் காட்டவிரும்புகிறார். சீவகன் அவளை விரும்பவில்லை என்று திட்டவட்டமாக முடிவு செய்து விடுகிறார். பின்னால் சீவகன் அனங்க மாலையை ஏற்றுக் கொள்ளும் கட்டம் ஒன்றுவருகிறது. அவர் தன் கருத்திற்கேற்ப அதனை முற்றிலும் மாற்றி உரை செய்துவிடுகிறார்.

---

* முறுவல்—புன்சிரிப்பு; ஓடரி நெடுங்கண்: சிவந்த வரிகள் படர்ந்த நெடிய கண்.

"தன் கூத்தினால் அவற்கு வேட்கை நிகழ்ந்ததோ என்றறிதற்கு நோக்குகின்றவள் தான் குறித்தன கொள்வானாக நோக்கினமையை உருவகமாகக் கூறி னார். அதனை அவன் கொள்ளாமை கண்டு நாடக மகளாதலின் தன்னெஞ்சு வருந்தாதபடி அதனைத் தேற்றுகின்றாளாக மேலிற் கவி கூறுகின்றார். மாதவி 'மாலை வாராராயினும் மாணிழை காலை காண்குவம்' என்றாற் போல"

— 683 சீவகசிந்தாமணி உரை.

"தன்னை அவன் விரும்பாமை உணர்தலின்......
........... தன் மனத்தைத் தேற்றி."

— 684 உரை.

தன்னை விரும்பாத சீவகன் விரும்புவான் விரும்புவான் என்று அனங்கமாலை தன்னைத் தானே தேற்றிக் கொள் வதாகக் கூறி அதற்கு எடுத்துக்காட்டாக மாதவியைக் காட்டுகிறார். நாடக மகள் ஆதலின் அப்படித்தான் செய்வாளாம். வராத கோவலன் வருவான் வருவான் என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள் மாதவி. அதைப்போல தன்னைக் காதலிக்காத சீவகன் காதலிப்பான் காதலிப்பான் என்று கனவு காண்கிறாளாம் அனங்கமாலை,

மாலை வாராவிட்டாலும் காலை காதலன் உறுதியாக வருவான் என்பது மாதவியின் நம்பிக்கை. மேதக்க அன்புள்ளத்தில் எழுந்த அசையாத நம்பிக்கை அது. அன்புள்ளம் மற்றோர் உள்ளத்தின் அன்பை நாடிக் கிடைக்காத போது தன்னைத் தானே அது தேற்றிக் கொள்ளுகிறது. அந்தக் காதல் தத்துவத்தைத் தெம் போடு வாங்கிப் புரிந்து கொள்ள நச்சினார்க்கினியரால் முடியவில்லை. அது அவருக்கு நாடகக்காரியின் பேச் சாகப்படுகிறது.

பிறப்பால் தாழ்ந்தாலும் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள் உண்டு. ஒழுக்கத்தால் பெறும் உயர்வே உயர்வாகும். அந்தப் பேருண்மையை ஒத்துக்கொள்ளும் பெருந்தன்மை நச்சினார்க்கினியரிடத்தில் சற்று குறைந்தே காணப்படுகிறது. அது காலத்தால் நேர்ந்ததாக வைத்து அமைதி கொள்ளலாம். மாதவி ஒழுக்கத்தால் உயர்ந்து கண்ணகிக்கு நிகராக நிற்பவள். சிலப்பதிகார ஆசிரியர் மாதவியை எவ்வளவு உயர்வாக நினைக்கிறாரோ அவ்வளவு உயர்வாக நச்சினார்க்கினியர் நினைக்கவில்லை. பரத்தையர் என்றாலே எல்லோர்க்கும் ஏற்படும் பொதுவெறுப்பு அவரிடத்திலும் காணப்படுகிறது. பரத்தையர்க்குள்ள குணம் போகாது என்று அவர் நினைப்பதும் சாதிக் குணம் எங்கே போகும் என்று குறிப்பாக நகையாடுவதும் நமக்குத் தெரியாமல் இல்லை.

பதுமையின் மணம் கூறியபின் சீவகன் தேசிகப் பாவையைக் கூடி நலம் பெற்றமை கூறப்படுகிறது. தேசிகப்பாவையின் செய்தி கூறும் பாடற்கு அடுத்த பாடலில் இவ்விருவரும் போற்றச் சீவகன் இனிது வைகினான் என்றும் இவ்வாறு இரண்டு திங்கள்கள் கழிந்தன என்றும் ஆசிரியர் கூறுகிறார். பதுமையும் தேசிகப் பாவையும் போற்றிப் பரவ என்றெழுதுவதே முறை. அவ்வாறு எழுதாமல் பதுமையும் பதுமையின் தாயும் போற்றியதாக-அதாவது மாமியாரும் மகளும் போற்றிப் பரவ மணமகன் வைகினான் என்று உரை எழுதுகிறார். தேசிகப்பாவையை எவ்வாறு விலக்கினீர் என்று நச்சினார்க்கினியரைக் கேட்டால்,

"பதுமையையும் பரத்தையையும் ஒக்கக்கூறல்
ஆகாமை உணர்க"

[1358—சிந்தாமணி உரை]

என்று விடை பகர்வதைக் காணலாம். ஒழுக்கம் குல இழிவைப் போக்குகிறது என்ற உண்மையை இனியர் அனுதாபத்தோடு ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

தேசிகப்பாவையின் காதலைக் காதலாக ஏற்றுக்கொள்கிற நச்சினார்க்கினியர் அனங்கமாலையின் காதலை காதலாக ஒப்புக் கொள்ள மறுக்கிறார். அது ஒருதலைக் காமம் என்று முடிவுகட்டுகிறார். காரணமின்றி நச்சினார்க்கினியர் ஒரு முடிவுக்கு வரமாட்டார்.

கட்டியங்காரன் வலிந்து பற்றி அவள் கற்பிற்குக் களங்கம் ஏற்படுத்திவிட்டான் என்பதும் அவ்வாறு மாசுற்றவளைச் சீவகன் ஏற்றுக்கொண்டான் என்று கூறினால் அது இழுக்காக முடியும் என்பதும் அவர் கருத்து. "தானுடை முல்லையெல்லாம் தாதுகப்பறித்திட்டானே" என்ற தொடருக்கு உரை எழுதுங்கால் முல்லை என்பதற்கு கற்பு எனப்பொருள் உரைத்து கற்பு களங்கமுற்றதாக நச்சினார்க்கினியர் முடிவு செய்தார். அதனை அடுத்துவரும் பாடலில் 'கலையினிற் கன்னி நீக்கி' என்ற தொடரில் கன்னி என்பதற்கு அழிவின்மை என்று பொருள் கூறினர். மேகலையிடத்து அழிவின்மையை நீக்குதலாவது அழிவை உண்டாக்குதல். அதாவது மேகலை சிதைந்து போயிற்று என்பதாம். ஒரு கொடியவன் கையில் சிக்கிய இளம்பெண்-அதுவும் சாதாரண மனித ஆற்றல் மட்டுமே உள்ள பெண்—எப்படித் தன் கற்பைக் காப்பாற்றிக் கொண்டிருக்கமுடியும்? இந்தக்

கேள்விதான் நச்சினார்க்கினியரின் முடிவுக்கு ஆதரவகா இருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ விரும்பியோ விரும்பாமலோ மாசுபடுத்தப்பட்ட ஒருத்தியைத் தன்னிகரில்லாத தலைவன் ஒருவனோடு சேர்த்துவைப்பது எங்ஙனம்? அதனால்தான் நச்சினார்க்கினியர் சீவகன் அனங்கமாலையை விரும்பவே இல்லை என்று சாதிக்கிறார். அப்படியானால் நூலாசிரியர் முடிவுதான் என்ன ?

கட்டியங்காரனை வீழ்த்தித் தன் தந்தை இழந்த அரசை மீண்டும் பெற்ற பின்னர் தான் மணந்த மனைவியரனை வரையும் சீவகன் வரவழைத்தான். அவரவர்க்குச் செய்ய வேண்டிய நலங்களைச் செய்தான். இச்செய்தி கூறிய பின்னர் பரத்தையர் இருவரோடும் மகிழ்ந்திருந்த செய்தி கூறப்படுகிறது. முதலில் அனங்கமாலையோடு குலவிய செய்தி பன்னிரண்டு பாடல்களிலும் அடுத்து தேசிகப் பாவையின் ஆடல்கண்டு மருவிய செய்தி மூன்று பாடல் களிலும் கூறப்படுகின்றன.

அனங்கமாலை தோழிகள் புடைசூழத் தலைவாயிலிலே வந்து நின்றாள். அதனை அறிந்த சீவகன் "வல்லே வருக" (விரைந்து வருக) என்றழைத்தான். வந்த அனங்கமாலை யோ தன்னை அனங்கமாலைபோல் காட்டிக் கொள்ளாமல் அவள் தோழிபோலக் காட்டிக் கொண்டாள். அனங்க மாலை கொடுத்தனுப்பியதாக ஓர் ஓலையைச் சீவகனிடம் நீட்டினாள். சீவகனால் தன்னை யாரென்று தெரிந்து கொள்ள முடிகிறதா ? தன் நினைவு இருக்கிறதா? என்று சோதித்துப் பார்ப்பதற்காகவே அவள் இவ்வாறு செய் தாள். சீவகனுக்கா தெரியாமல் போகும் ?

"என்னிடம் ஏன் இத்துணை அன்புகாட்டுகிறீர்கள் ? அடியாள் அனங்கமாலையின் தோழிதானே நான் ?"

"அருளுமாறு என்னை அனங்கமாலை அடித்தி தோழி அன்றோ?" என்று கேட்கிறாள்.

"என் அறிவை அளக்க நினைக்கிறாயா உன்னை நான் மறப்பேனோ" என்று மறுமொழி கூறுகிறான் சீவகன்.

"என் அறிவு அளக்கிய கருதி
மருளிற் சொன்னாய் மறப்பேனோ யான்"

என்பது காவியவாசகம்.

பின்னர் கேட்கவேண்டுமா? சீவகன் பரந்த தோள் களிலே அவள் குண்டலங்கள் அசைந்து ஒளிவிட்டுக் கொண்டிருந்தன.

தேவர் இச் செய்தியைக் கூறத்தொடங்கும் போது.

* "......... ...... .....காமப்
பதம்பல பார்க்கும் சாயல்
பாவை மற்று அனங்கமாலை
விதம்படக் கருதி மாதர்
விளைத்தது விளம்ப லுற்றேன்."

இத்தொடக்கப் பாடலில் அனங்கமாலை என்று தெளி வாகக் கூறப் பெற்றிருக்கிறது. நூலாசிரியர் அனங்க மாலையைச் சேர்த்து வைக்க வில்லை என்று எப்படிக் கூறுவது? தேவர் குலத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இழிந்ததாக நினைத்தாலும், அவளுடைய காதலையும் கலை நலத்தையும் அனுதாபத்தோடு ஒத்துக்கொள்கிறார்.

---

*காமப் பதம்—காமம் நுகரவல்ல செவ்வி; சாயல்—மென்மை; பாவை—பெண்; விதம்பட—பல்வகையானும் நினைந்து அமைய; மாதர்—காதல்; விளம்பல்—சொல்லுதல். விதம்பட என்பதற்கு சீவகன் உண்மையில் அன்புடையனாக இருக்க அன்பிலனோ என்று வேறுவிதமாக எண்ணி எனப் பொருள் உரைக்கினும் அமையும்

கட்டியங்காரன் வலிந்து பற்றிச் சென்றாலும் அனங்க மாலை சீவகன் பெயரையும், பெருமையையுமே சொல்லிச் சொல்லி அரற்றிக் கொண்டிருக்கிறாள். அதனைக்கேட்டுப் பொறாது அவளை ஒன்றும் செய்யாமல் போகவிட்டிருக் கலாம்.

''பைம்பொற் செறி கழலினாய்
என்ன நாளும் அரற்றப் பொறான் விடுப்பப் போகி''

என்று அனங்கமாலையே சீவகனிடம் கூறுதல் நோக்கத் தக்கது. அவளைக் கொண்டு வந்தவுடன் கட்டியங்கார னின் நோக்கம் சீவகனின்மேல் திரும்பிவிடுகிறது. பகைக் கனலே உள்ளத்தில் நின்று நிலவுகிறது. பகைக்கனலுக்கு முன் காமக்கனல் ஒருவேளை மறைந்து போகவும் வழி யுண்டு. காம நுகர்ச்சியைக் காட்டிலும் கட்டியங்கார னுக்கு அரச வாழ்வே பெரிதாகப் படுகிறது. அதனினும் இங்கொன்று காணுதற்குரியது. சீவகன் பிறக்கு முன் னரே அரசியல் வாழ்வில் பங்குகொண்டவன் கட்டியங் காரன். சீவகன் காளைப்பருவம் அடைந்த போது அவ னுக்கு சீவகனைக் காட்டிலும் இருமடங்கு வயதிருக்க லாம். எனவே காதல் துறையில் சீவகனுக்குப் போட் டியாக அவனை நிறுத்தத் தேவர் விரும்பாமல் இருந்திருக்க லாம்.

நச்சினார்க்கினியர் 'காமப்பதம்பல பார்க்கும் சாயல் பாவை'யாவாள் தேசிகப்பாவை என்று பொருள் உரைக் கிறார். தேசிகப்பாவை காதல் விளைத்தமை விளம்பலுற் றேன் என்று ஆசிரியர் கூறுவதாக வைத்து பன்னிரண்டு பாடல்களிலும் தேசிகப்பாவையின் செய்தியே கூறப் பட்டிருப்பதாகக் காட்டிவிடுகிறார்.

தேசிகப்பாவை அனங்கமாலையின் தோழியைப் போல வந்தாளாம். அனங்கமாலை எழுதியது போன்ற ஓலை

ஒன்றைச் சீவகனிடம் கொடுத்தாளாம். அனங்கமாலையிடம் தான் சீவகன் மிகக் காதல் கொண்டிருக்கிறான் என்று நினைத்ததனால் அனங்கமாலையின் தோழியாகத் தன்னைக் காட்டிக் கொண்டாளாம்.-இதுதான் நச்சினார்க்கினியர் சொல்லும் கதை.

> "பதுமையாருடன் கூட அழைத்துக் கோடல் முறைமையன்மையிற் பின்பு அழைக்கக் கருதியிருந்த தேசிகப்பாவை சீவகன் தன்னிடத்து அன்பின்மையின் தன்னை மறந்தானாகக் கருதித் தானே வந்தவள் சீவகன் கருத்தறியாதே அவன் அனங்கமாலையை உட்கொண்டிருப்பானாக கருதி அவள் தோழி ஓலை கொண்டுவந்தாளாகக் நடித்ததொரு செய்தியைக் கூறுகின்றார் என்றவாறு."
>
> —2584—உரை—சிந்தாமணி

நச்சினார்க்கினியர் சொல்லைத்தான் மாற்றுகிறார் என்று நினைத்தோம். ஆளைக்கூட மாற்றிவிடுகிறார். எவ்வளவு துணிச்சலான உரைகாரர்! கதைப்போக்கை அவ்வளவு தூரம் சிந்திப்பதனால் உரையாசிரியர் 'இந்த வேலைகளெல்லாம்' செய்து தன் கருத்தை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது! ஏதோ அவருக்குத் தோன்றியதைச் சொல்லுகிறார் என்று நினைப்பதற்கில்லை. கருத்தை முடிபுகளாக்கி நிலை நிறுத்த அவர் எவ்வளவு முயல்கிறார்!

தன் கருத்தை நிலைநாட்ட இந்தப்பாடலில் அவருக்குக் கிடைத்த ஆதரவான சொற்களைக் காண்போம். பாவை என்ற சொல்லுக்குப் பொதுவாகப் பெண் என்று கூறலாம். அவரோ பாவையென்றது தேசிகப்பாவையை என்று விளக்கம் செய்கிறார். விதம்பட என்பதை அனங்கமாலை விதம்பட என்று கொண்டு அனங்கமாலை கூற்றிலே தான்பட என உரை செய்கிறார்.

அனங்கமாலை கொடுத்ததாகச் சொல்லும் ஓலைச் செய்தியை விரித்துத் தேவர் ஏன் இங்கு கூறவேண்டும்? தேசிகப்பாவை அனங்கமாலையின் தோழிபோல் வந்தாள் என்றால் அனங்கமாலை எழுதியதாக வரும் செய்தியினை விரித்துக்கூறியிருக்க வேண்டாம். நெடுநாட்களுக்குப் பின் தான் விரும்பிய காதலனை அனங்கமாலை காண்கிறாள். தன்னை வலியக் கொண்டுபோன கயவன் ஒன்றும் செய்ய வில்லை என்பதையும் சீவகன் பெயரையே சொல்லிக் கொண்டிருந்ததால் அது பொறாமல் அவன் அவளைப்போக விட்டான் என்பதையும் சொல்லத்துடிக்கிறாள். தான் தூயவள் என்பதைக் குறிப்பாகக் காட்டிக் கொள்ள அந்த வாய்ப்பு அவளுக்குத் தரப்பட்டுள்ளது. ஓலைச் செய்தி கட்டியங்காரன் இழுத்துச் சென்றதன் பின் நடந்த செய்தியையே கூறுகிறது. தேசிகப்பாவையின் செயல்களாகக் கொண்டால் ஓலைச் செய்தி பொருள் பயப்பதாகவும் வேண்டப்படுவதாகவும் இல்லை.

அனங்கமாலையின் மேல் சீவகனுக்குக் காதல் உண் டென்றால் கட்டியங்காரன் அவளை இழுத்துச் சென்ற போது பொறாது மீட்டிருக்கவேண்டும். மீட்கவில்லை என்றால் கட்டியங்காரனுக்குப் பயந்து மீட்காமல் இருந் தான் என்றும் அதனால் அவன் கோழை என்றும் முடிவு செய்யநேரும். சீவகன் பெயருக்கு எந்தவித இழுக்கும் வரக்கூடாதென்பதே நச்சினார்க்கினியரின் நோக்கமாகும்

தலைவாயிலில் நின்ற அனங்கமாலையை 'விரைந்துவருக' என்கிறான் சீவகன். அனங்கமாலையென்று நினைத்து அவ்வாறு சொன்னானா? தேசிகப்பாவையென்று கருதிச் சொன்னானா என்ற வினாக்கட்கு விடையாக,

" அனங்கமாலையை வல்லேவருக என்றானாயின் இனி அவள் எக்காலத்து வருவாள் என்று அவள் வரவை விரும்பியிருந்தானும். ஆகவே அவளைத் (அனங்க மாலையைத்) தீண்டி ஒப்பித்தலின் தனக்கு நிகழ்ந்த வேட்கையைக் கட்டியங்காரற்கு அஞ்சிக் கரந்திருந்து அவன் அவளை வலிதிற்கொண்டு போதற்கும் பொறுத் திருந்தானும். ஆயின் அவன் வீரத்திற்குத் குற்றம் தங்கும் என்றுணர்க."

[இலக்கணையார் இலம்பகம்—2585—உரை.]

என்று உரையாசிரியர் விளக்கவுரை நல்கியிருக்கிறார்.

காவியத் தலைவனை உருவாக்குதற்கு நூலாசிரியர் எடுத்துக் கொண்ட முயற்சியைக் காட்டிலும் உரையா சிரியர் எடுத்துக் கொண்ட முயற்சி ஒருபடி முன் னேறியே சென்றிருக்கிறது.

ஆயினும் மற்றொன்று சிந்தித்தற்குரியது. நச்சினார்க் கினியர் கொள்கையை ஏற்றுக்கொண்டால் நூலாசிரியர் தேசிகப்பாவையின் செய்தியை முதல் பன்னிரண்டு பாடல்களில் கூறி மீண்டும் மூன்று பாடல்களில் அவள் செய்தியையே திரும்பக் கூறுவானேன்? அதனால் பயனே தும் உண்டா? தொடர்ந்து படிப்பவர்களுக்கு அது தெரியும். நூலாசிரியர் கருத்தை விட்டு ஒரு கோடு உரையாசிரியர் விலகிச் சென்றாலும் நல்லதற்காகவே விலகிச் செல்கிறார் என்று அமைதி கொள்ளலாம். நமக்கு வேண்டுவதெல்லாம் நச்சினார்க்கினியர் உள்ளம் தானே!

'சீவகன்-அனங்கமாலை' காதலுக்கு முக்கியத்துவம் கொடுத்து விரிக்க நூலாசிரியர் விரும்பவில்லை. அப்படிப் பட்ட பெரிய மாறுதலுக்கும் காவியம் இடம் தரவில்லை. இரண்டு பகைக் கோணங்கள் ஒன்றுக்கொன்று

நேரடியாகத் திரும்ப அவளைக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறார். ஆயினும் வெறும் கருவியளவிலே அவளை நிறுத்திக் கதையை முடித்துவிடாமல் கதை முடிவில் ஆசிரியர் அனுதாபத்தோடு சீவகனோடு சேர்த்து வைக்கிறார்.

## 4

புத்திசேனனிடம் அனங்கமாலையைப் பற்றிய செய்திகளையெல்லாம் சீவகனின் தந்தையே கூறுவதாகத் தேவர் எழுதுகிறார். மகனைப்பற்றிச் சுழலும் காதல் நடவடிக்கைகளையெல்லாம் தந்தையே கூறுவதாக அமைப்பது எப்படி? தன் மகன்மேல் ஒருத்தி காதல் கொண்டரற்றியதை அப்படி அப்படியே ஒன்று விடாமல் சொல்லலாமா? அனங்கமாலையைப் பற்றிய செய்தியை வாசகர்களுக்குத் தெரிவிக்கவேண்டிய நிலையில் கவிஞர் இருக்கிறார். கவிதாவெள்ளம் பெருக்கெடுக்கும்போது நாடகப் போக்கை நினைப்பதற்கு நேரமில்லாமல் போய்விடுகிறது.

குங்குமம் திகழக் குண்டலம் ஒளிநிழற்றக் கழுத்திலே மாலை மின்ன அனங்கமாலை ஆடினாள். ஆடவர் உள்ளங்களையே அரங்கமாக்கிக் கொண்டு ஆடினாள்.

*** குங்குமச் சாந்து வேய்ந்து**
**குண்டலந் திருவில் வீச**
**அங்கதிர் ஆரம் மின்ன**
**அரிவை கூத்தாடுகின்றாள்.**

**[677—சிந்தாமணி]**

**ஆடவர் மனங்க ளென்னும்**
**அரங்கின்மேல் அனங்க மாலை.**
**ஆடினாள்...... [683—சிந்தாமணி.]**

---

*** சாந்து வேய்ந்து—சந்தனம் அணிந்து; திருவில் வீச—ஒளிவீச: அம்கதிர் ஆரம்—அழகிய ஒளிபொருந்திய மாலை; அரிவை—பெண்.**

என்று கூறும்போது தேவரும் அந்த ஆடலில் ஐக்கியமாகி விடுகிறார். அனங்கமாலையின் அழகையும் கலைநலத்தை யும் விரிப்பதிலே முழு வெறியோடிருக்கும் கவிஞரிடம் நாடகபாவம் முக்கியத்துவம் பெறவில்லை. உண்மையான கவிதை உணர்ச்சிக்கு எதிரே அது குற்றமாகாது.

வளமலர் சூடப்பெற்றேன் என்ற பாடலும் 'புல்லு சீவகசாமி' என்பனபோன்ற தொடர்களும் தந்தை தன் மகனைப்பற்றி அவன் தோழனிடம் கூறுகிற முறைக்குச் சற்று மிகுதிப்பட்டே நிற்கின்றன.

இவற்றைக் கண்ட நச்சினார்க்கினியர் கந்துக்கடன் கூறுவதாகக் கொண்டால் உறவு முறையில் இயைபு விட்டுக் காட்டுகிறதே என்று நினைத்தார். தேவரோ கந்துக்கடன் கூறுவதாகவே எழுதிச் செல்கிறார். அதற்கு ஒவ்வாத நச்சினார்க்கினியர் ஓலைகொண்டுவந்தவன் கூறிய னவாக அவற்றைக் காட்டுகிறார். ஓலைகொண்டுவந்தவள் புத்திசேனனிடம் கூறும்போது கந்துக்கடன் அங்கே இல்லை. வீட்டுக்குள் ஒருவேலையாகச் சென்றுவிடுகிறு னும். கூறிமுடித்த பின்னர் அங்கே வருகிறான், மகனைப் பற்றிய காதற்செய்திகளைக் கூறும்போது அந்த இடத்தில் கூட அவன் தந்தையை நச்சினார்க்கினியர் விட்டுவைக்க வில்லை, இதற்காக எத்துணையோ இடங்களில் சொற்களை மாற்றினார் கூட்டினார்*.

நச்சினார்க்கினியர் காவியப் போக்கையும் கதை நிகழ்ச்சி களையும் எவ்வளவு சிந்திக்கிறார் என்பதையும், நூலாக் கத்தில் குறை இருப்பதாக அவருக்குப் பட்டால் அதனை

* இக்கவியில் 'இதுபட்ட தடிகள் என்றாள்' என்னுமிடத்து அடிகள் என்றாள் என்பதனை "மேலைநாட்பட்டதொன்று விளம்பு வல் அடிகள் என்றாள்' என அதனோடு கூட்டி ஓலை கொண்டு

நூலாசிரியன் குறை என்று ஏழுத மனம் துணியாமல் உரை சொல்லும் முறையை வைத்துக்கொண்டு அவற்றை நிறை செய்துகொள்ளுகிறார் என்பதையுமே ஈண்டு காட்டினேன்.

நச்சினார்க்கினியர் சொற்களை மாற்றியிருக்கும் முறை இதுதான்:

693ம் பாடலின் முதல் இரண்டடிகட்குப்பின்.
670ம் ,, இரண்டுசீர் (இதுபட்டதடிகள்) அவற்றின்பின்
671ம் ,, இறுதி இரண்டடிகள் அவற்றின்பின்
693ம் ,, இறுதி இரண்டடிகள்.

ஏன் இவ்வாறு மாற்றுகிறீர் என்று கேட்டால், நச்சினார்க்கினியர் கூறுவது இதுதான்;—

"இங்ஙனம் கூறாது 'இது பட்டதடிகள்' என்று கந்துகனுக்கு அவள் கூற அவன் புத்திசேனனுக்குக் கூறினான் என்று கூறின் புதல்வன் செய்தியைத் தந்தை கூறுமுறையால் கூறாது இடக்கர் முதலிய கூற்றாற் கூறினாகத் தேவர் கூறார் என்றுணர்க."

[671—உரை]

---

வந்தவள் வார்த்தையாக்குக. '**கேளிதென்றாள்**' என்பதனை அது கேட்ட கந்துகன் திங்கள் விரவிய பெரியனாற்கு இவள் கூறுகின்ற இதனை நீ கேளென்றான் என்க. '**இன்னன்**' என்னும் கவியில் '**சூழ்ச்சி தன்னுளான்**' என்பதன் பின்னே '**இதுபட்டதென்றாள்**' என்று ஓலை கொண்டுவந்தவள் கந்துகன் சிறைப்புறமாகப் புத்திசேனனுக்குச் செய்தி கூறினாளாக்கி முடித்து '**ஓலையை**' என்னும் கவியில் '**மறைய நல்கி**' என்பதள வாக அதன் பின்னே கூட்டி, படையமைத் தெழுமின் என்பதனை அதன் பின்னே கூட்டுக. '**என்றாள்**' என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக.

[நச்சினார்க்கினியர் உரை 670—சிந்தாமணி.]

தேவருடைய பக்கத்திலிருந்து சற்று அனுதாபத்துடன் சிந்தித்தால் அவருடைய அமைப்பு முறைக்கு அமைதி தேடலாம். 'படையமைத்துப் போய்வாருங்கள்' என்று முன் எச்சரிக்கை செய்யும் கந்துக்கடன் அதற்குரிய காரணத்தையும் கூறவேண்டியது நியாயமே ஆகும். ஆயினும் கூறவேண்டிய முறை ஒன்றிருக்கிறதே என்று கேட்கலாம். பொதுவாகக் காவிய இயல்பு என்று கொண்டுவிட்டால் இதனே விரித்துப் பார்த்துப் பெரிது படுத்த நேர்ந்திருக்காது. படிக்கிறவர்களுக்கு கவிதா ரீதியாக அனங்கமாலேயை அறிமுகப்படுத்த நூலாசிரியர் துடிக்கிருர். இதனுல் தந்தையின் ரூபத்திலிருந்து நூலாசியர் அடிக்கடி வெளிப்பட்டுப் போகிருர். அப்படி வெளிப்பட்டுப் போவதுகூடக் கவிதையின் அழகை மிகுதிப்படுத்தத்தானே செய்கிறது?

*

## நச்சிஞர்க்கினியரைப் பற்றிய பாயிரச் செய்யுட்கள்.

### ( வெண்பா )

1 பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டும்கலியும்
ஆரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்கும் — சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி ஞர்க்கினிய மே.

SB
9-44

### ( நேரிசையாசிரியப்பா )

2 பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொருள் நுண்ணிதின் உணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தின்
நாற்பொருள் பொதிந்த தாக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தையன் ஆகிப் பாற்பட
எழுத்தும் சொல்லும் பொருளும்இம் மூன்றும்
இழுக்கற வாய்ந்த வழுக்கில்தொல் சீர்த்தித்
தொல்காப் பியம்எனும் தொடுகடற் பரப்பை
மறுவும் குறையும் இன்றி என்றும்
கலையின் நிறைந்த கதிர்மதி என்ன
நிலையுடை கலத்தின் நெடுங்கரை காணுக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியும்
நல்லறிவு உடையோர் நயப்பது வேண்டியும்
உரையிடை இட்ட காண்டிகை உரைத்தும்
ஆன்ருேர் புகழ்ந்த அறிவினில் தெரிந்து
சான்ருேர் உரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒருபது பாட்டு உணர்பவர்க் கெல்லாம்
உரையற முழுதும் புரைபட உரைத்தும்
ஒலித்திரைத் தலத்தின் உணர்ந்தோர் உரைக்கும்

கலித்தொகைக் கருத்தினைக் காட்சியில் கண்டதற்(கு)
உள்ளுறை உவமமும் ஏனை உவமமும்
தெள்ளிதில் தெரிந்து திணைப்பொருட் கேற்ப
உள்ளுறை உவமத்து ஒளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந்து உணர்த்தி

இறைச்சிப் பொருளுக்கு எய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்

பாற்பட நூலின் யாப்புற உரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற இன்னுரை பொருள்பெற விளம்பியும்
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்

சிந்தா மணியைத் தெண்கடல் மாநிலம்
வந்து ஆதரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது என்னப்
பருப்பொருள் கடிந்து பொருள்தொடர்ப் படுத்து

வினையொடு முடியப் புனையுரை உரைத்தும்
நல்லறி வுடைய தொல்பே ராசான்
கல்வியும் காட்சியும் காசினி அறியப்
பொருள்தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்(கு)
இதுபொருள் என்றவன் எழுதாது ஒழிய

இதுபொருள் என்றதற்கு ஏற்ப உரைத்தும்
தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்

எண்டிசை விளங்க வந்த ஆசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாசன்
நான்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே ஆகிய தன்மை யாளன்
நவின்ற வாய்மை நச்சினார்க் கினியன்
இருவினை கடியும் அருவியம் பொதியிலில்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
ஊழி ஊழி காலம்
வாழி வாழிஇம் மண்மிசை தானே.

( விருத்தம் )

பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்நால் திசையும் உண்ணும் அமிழ்தென எழுநா எச்சில்
மெச்சிநாள் நாளும் விண்ணோர் மிசைகுவர் வேதபோதன்
நச்சினார்க் கினியன் நாவின் நல்லுரை கொள்வர் நல்லோர்.

❋

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 105784
MADRAS